Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 31 | 14-06-2003 | சனிக்கிழமை | ஓசை 116




# இரு தரப்பிலும் யுத்தநிறுத்தத்தை மீறுவோரை கண்காணிப்புக்குழு கையேற்க வேண்டும்



## கண்காணிப்புக் குழுத்தலைவருடனான சந்திப்பில் சு.ப.தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

**இருதரப்பினரும் கைது செய்யப்படுபவர்களைத் தடுத்து வைப்பதனைத் தவிர்த்து யுத்தநிறுத்த மீறலில் ஈடுபடும் இருதரப்பினரையும் இந்த விடயத்தைக் கையாளுகின்ற கண்காணிப்புக்குழு கையேற்பதுதான் சரியான நடைமுறையாகும். இதுதான் முறுகல் நிலையினையும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கும் ஏற்ற சூழ்நிலையை உருவாக்கும் என யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கு தெளிவுபடுத்தியுள்ளோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் தலைமையிலான குழுவினருடன் கலந்துரையாடல் நடத்தியபின் செய்தியாளர்களுக்கு செவ்வியளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்; முக்கியமாக போராளிகள் அண்மையில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்படுவது தொடர்பாகவும் அரசாங்கத் தரப்பின் நிலைப்பாடு குறித்தும் அவர்களது வேண்டுகோள் குறித்தும் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

இருதரப்பினரும் மாறிமாறி ஒருவருக்கொருவர் கைது செய்வதென்பது நெருக்கடி நிலைமையினை மேலும் தீவிரப்படுத்துவதற்கு வழிச

(08ஆம் பக்கம் பார்க்க)

# எமது உறுப்பினரை விடுவித்தால் கடற்படைச்சிப்பாயை விடுவிப்போம்

### திருமலை அரசியல்துறைப்பொறுப்பாளர்

(திருமலை)

விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறிலங்கா கடற்படைச் சிப்பாயான ரொகான்குமாரவை விடுதலை செய்வதாயின் கடந்த வருடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் குருரதன் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் திலக் தெரிவித்துள்ளார்.

தம்பலகாமம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட இவர் கடந்த ஒரு வருடகாலமாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தினமே இவ்வறிவிப்பை அவர் விடுத்துள்ளார்.

# சமாதானச் சூழலை ஏற்படுத்துவதிலுள்ள ஆர்வத்தை சர்வதேச சமூகம் தெளிவுபடுத்தியுள்ளது

### அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

சர்வதேச சமூகம் இங்கு ஒரு சமாதானச் சூழ்நிலையைக் கொண்டு வரவேண்டும் என்பதில் ஆர்வமாகவுள்ளது என்பதை தெளிவுபடுத்தியுள்ளன என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் வானொலி சேவை ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

நேற்று அவரிடம் டோக்கியோ மாநாடு தொடர்பாகக் கேட்கப்பட்டபோது அவர் பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கேள்வி: டோக்கியோ மாநாடு நடந்து முடிந்துள்ளது. இதற்கு பின்னர் அரசிடம் இருந்து இது தொடர்பாக ஏதாவது பதில்கள் கூறப்பட்டிருக்கின்றனவா?

பதில்: இதுவரை இல்லை.

கேள்வி: டோக்கியோ மாநாட்டில் எதிர்பார்த்ததைவிட கூடுதல் நிதி கிடைத்திருக்கின்றது. இது எதனை வெளிப்படுத்துகின்றது என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

பதில்: சர்வதேச சமூகம் இங்கு ஒரு சமாதான சூழ்நிலையைக் கொண்டு

(08ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் யாப்பை மாற்ற பொ.ஐ.மு. தயாராகவுள்ளது!

### லக்ஷ்மன் கதிர்காமர்

(கொழும்பு)

அரசியல் அமைப்புச் சட்டத்தை முழுமையாகத் திருத்தி அமைத்து வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் அதிகாரங்களை வழங்க பொ.ஐ.மு. தயாராக இருப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினரும் சனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

பூரண அதிகாரங்களைக் கொண்ட சனாதிபதி ஆட்சி முறையை மாற்றி அதிகாரப் பரவலாக்கல் போன்ற விடயங்களுக்காக அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்தி அமைப்பதன்

(08ஆம் பக்கம் பார்க்க)

# குறிப்பான முடிவெதுவும் எடுக்கப்படவில்லை; சந்திப்பு ஆக்கபூர்வமாக இருந்தது

### கண்காணிப்புக்குழுப் பேச்சாளர்

மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதியில் அண்மையில் நடந்த சம்பவங்கள் பற்றி நீண்டநேரம் விவாதித்தோம் ஆனால் இது குறித்து ஒரு குறிப்பான முடிவும் எடுக்கப்படவில்லை. ஆனால் சந்திப்பு ஆக்கபூர்வமான முறையிலிருந்தது என போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஆக்னஸ் தெரிவித்தார்.

வழிதவறி மாற்றுத் தரப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பரப்பிற்கோ அல்லது கடற்பரப்புக்கோ சென்று பிடிபட்ட படையினர் மற்றும் புலிகள் இயக்க உறுப்பினர்களை திரும்ப அனுப்புவது குறித்த வழி முறைகள் மற்றும் ஏற்பாடுகளை இலங்கை போர் நிறுத்தக்கண் காணிப்புக் குழுவி

(08ஆம் பக்கம் பார்க்க)

# பிரதான வீதி திறக்கப்படாமை பற்றி பொதுமக்கள் விசனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கல்குடாவில் சிறிலங்காப் படைமுகாம் ஊடான பிரதான வீதி போக்குவரத்துக்குத் திறக்கப்படாமை குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இதனால் பிரசித்திபெற்ற மூனை முருகன் ஆலயத்துக்கு பக்தர்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் இந்த ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவையும் நடத்த முடியவில்லை என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# ஒப்படைக்க கோரிக்கை

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இல்லாத குடும்பங்களின் குடும்பப்பதிவு அட்டைகளை வைத்திருப்பவர்கள் தங்கள் பகுதியில் அமைந்துள்ள அனுமதி வழங்கும் செயலகங்களில் அக்குடும்பப்பதிவு அட்டைகளை உடன் ஒப்படைக்குமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்பப் பதிவுஅட்டைப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் படையினர் சோதனை அதிகரிப்பு

(கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சிறிலங்காப் படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் ஆயுதம் தாங்கிய பொலிசார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன் கொழும்பிற்கான நுழைவாயிலிலும் படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

வெள்ளவத்தை பம்பலப்பிட்டி போன்ற பகுதிகளில் சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுகின்றன. இந்தப் பகுதிகளில் விசேட போக்குவரத்து பொலிஸ் பிரிவு 24 மணிநேர ரோந்து சேவையிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

# நிரந்தர நியமனம் தொடர்பாக வலயக் கல்விப்பணிமனைகளுடன் தொண்டராசிரியர் தொடர்பு கொள்க

(அலுவலக செய்தியாளர்)

தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்குவது தொடர்பாக அந்தந்த வலயப்பணிமனைகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொண்டராசிரியர்களில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் 135 பேருக்கும், முல்லைத்தீவு வலயத்தில் 83 பேருக்கும், துணுக்காய் வலயத்தில் 96 பேருக்கும், வவுனியா வடக்கு வலய

(08ஆம் பக்கம் பார்க்க)

# மருத்துவ சேவை நடைபெறாது

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த இலவச மருத்துவ சேவை நடைபெறமாட்டாது.

மேற்படி இன்றும் நாளையும் யாழ் போதனா மருத்துவமனையில் சேவையாற்றும் மருத்துவ நிபுணர்களால்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை,சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

### அறிவுடைமை கல்வி நிலையம் கிளிநொச்சி

2004 A/L கலை, வர்த்தக மாணவர்களுக்கான வினாவிடை வகுப்புக்கள் ஆரம்பம் 14-06-2003 சனிக்கிழமை. (3325)

### தேங்காய் விற்பனைக்குண்டு

தேங்காய் ஒரு லொறிலோட் விற்பனைக்குண்டு. இரட்ணம்ஸ்பாம் சுதந்திரபுரம், உடையார்கட்டு. (முல்லை) (3321)

### தவறிவிட்டது

நவநேசன், சந்திரகலா ஆகிய இருவருடைய தேசிய அடையாள அட்டை குடும்பஅட்டை என்பன கிளி-கரடிப்போக்கு சந்திக்கும் 3ஆம் வாய்க்காலுக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3326)


# –சட்ட மூலத்தில் மாற்றம் வராவிட்டால்–

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வரும் 25ஆம் திகதி நடைபெறும்

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் அருந்தவச் செல்வம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 25ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என அவர் கூறியுள்ளார். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற் றும் கல்முனை ஆகிய மூன்று மாநகர சபைகளுக்கும், ஆறுநகர சபைகளுக்கும், 44 பிரதேச சபைகளுக்கும் இத்தேர்தல் நடைபெ றவுள்ளது.

இதற்கான வேட்பு மனுக்கள் 2002 பெப்ரவரி மாதம் கோரப்பட்டது. இதனால், மீண்டும் வேட்பு மனு கோரப்படமாட்டாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சட்ட மூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இச்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் தேர்தலில் மாற்றங்கள் செய்யப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு முல்லை. அரசியல்துறையினர் சிரமதானம்

சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பில் அமைந்திருக்கும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் போராளிகள் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

காலை 9.00 மணிக்கு முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் தலைமையில் இச்சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

முல்லை. மாவட்ட வைத்திய அதிகாரி க.அழகேந்திரன் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்களை இனங்காட்ட முல்லை. மாவட்ட அரசியல்துறையைச் சேர்ந்த 35 இற்கு மேற்பட்ட ஆண், பெண் போராளிகள் கலந்து கொண்டு அவற்றை மேற்கொண்டனர். மாவட்ட வைத்தியசாலை வளாகம் முழுமையாகத் துப்புரவு செய்யப்பட்டு அனைத்துக் கழிவுப் பொருட்களும் வாகனம் மூலம் வெளியே எடுத்துச் செல்லப்பட்டன.

மேற்படி சிரமதானம் மாலை 5 மணிக்கு நிறைவடைந்தது. இறுதியாக மாவட்ட வைத்திய அதிகாரி க.அழகேந்திரன் சிரமதானப் பணியில் கலந்து கொண்ட அனைவரையும் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

# பாடசாலை மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

பாடசாலை மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை தொழில் வழிகாட்டல் பிரிவினரால் நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி கருத்தரங்குகள் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும், புதன்கிழமை புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்திலும் நடைபெற்றுள்ளது.

இக் கருத்தரங்குகளில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) மற்றும் உயர்தர மாணவர்கள் கலந்து கொண்டனர். தொழில் வழிகாட்டல் மற்றும் முறைசாராக் கல்வியின் அவசியம், கல்வி வழிகாட்டல் அவசியம் பற்றி மாணவர்களுக்கு விளக்கப்பட்டுள்ளது. (பா)

# கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறும்

## அரச மருத்துவர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை வேலை நிறுத்தம் இடம்பெறும் என்று அரச மருத்துவ உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

பொசன் போயா தினத்தை முன்னிட்டு நேற்று முதல் திங்கட்கிழமை காலை 8 மணிவரையும் மாத்திரமே தாம் மருத்துவக் கடமைகளில் ஈடுபடப் போவதாகவும் மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இக்கருத்துக்கள் வெளியிடப்பட்டன. முக்கிய நான்கு கோரிக்கைகளை முன்வைத்து மருத்துவர்களால் ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தம் தொடர்கின்றது. இதனால் வைத்தியசாலைகளில் சிகிச்சையளிப்பது முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இந்த வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் தொடர்பாக அரச மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்தின் இடைக்கால நிர்வாகக் குழுத்தலைவர் குமார் ஜெயசேகர கருத்து வெளியிடுகையில்; எமது கோரிக்கைகள் தொடர்பாக ஒரு நிரந்தர வாக்குறுதி வழங்கப்பட்டால் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரமுடியும். இந்த விடயத்தில் பிரதமராவது தலையிட்டு இப்பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டுமென்று கூறினார்.

அரச மருத்துவர்களுக்கும், பதிவு செய்யப்பட்ட உதவி மருத்துவர்களுக்குமிடையே பாரிய வேறுபாடுகள் இருப்பதுடன் கடமை ரீதியாகவும் அந்த வேறுபாடுகள் காணப்படுவதாக டாக்டர் எம்.எஸ்.எச் சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில் உதவி மருத்துவர்களுக்கும் எமக்குமிடையில் கடமைகள் உட்பட தகைமைகளிலும் வேறுபாடுகள் இருக்கின்றன. அரச உத்தியோகத்தர்களான மருத்துவ அதிகாரிகள் நாட்டின் விலைவாசியுடன் ஒப்பிடப்படும் போது தமது வாழ்க்கையை பெரும் கஸ்ரத்துடன் நடத்துகின்றனர். தனியார் சேவையில் ஈடுபட எல்லோருக்கும் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. அந்தளவு மாத்திரமே மருத்துவர்களைப் பாதுகாக்கின்றன. காசிற்காக நாங்கள் போராடவில்லை எமது தரத்தைக் குறைக்க வேண்டாம் என்றே கோரிக்கை விடுக்கின்றோம் எனத் தெரிவித்தார்.



கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 19வயதுக்குட்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் இறுதிப்போட்டிக்குத் தெரிவான கிளிநொச்சி ம.வி. அணி, உருத்திரபுரம் ம.வி. அணி வீரர்களை அறிமுகம் செய்து வைப்பதைப் படங்களில் காணலாம்.

## வருடாந்த உற்சவம்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நடைபெறவுள்ளது. மேற்படி வருடாந்த உற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி யூலை மாதம் 14ஆம் திகதி தெய்வத் திருவிழாவுடன் நிறைவடையும். (பா)

## அங்கத்துவத்தை புதுப்பிக்கவும்

கிளிநொச்சி மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி கிளிநொச்சி மாவட்டக் கிளையின் கீழ் இயங்கும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை போன்ற கிளைகளில் செயற்படும் ஆதரவளிக்கும் அங்கத்தவர்களாக இணைந்தவர்களின் உறுப்புரிமை ஒரு வருடகாலமே செல்லுபடியாகுமாதலால் தமது உறுப்புரிமைகளைப் பிரதேசக் கிளைகளில் தமது அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளும்படி இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளி.மாவட்ட கிளைச் செயலாளர் கேட்டுள்ளார். (பா)

# கமக்கார அமைப்புகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறப்பாக இயங்கிவரும் திட்டக் குழுக்கள், கமக்கார அமைப்புக்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும், தெளிகருவிகளும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் பகல் 10.00 மணிக்கு மேற்படி பொருட்கள் வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

கிளி. அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன், கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன், தமிழர் புனர்வாழ்வுக் கழக, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், கமநல சேவை ஆணையாளர், உணவு விவசாயத் திட்ட இணைப்பாளர், சமூக முன்னேற்ற நிலைய இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு மேற்படி பொருட்களை வழங்கிக் கௌரவித்தனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மேற்படி அமைப்புகளுக்கு 142 தெளிகருவிகளும், 11 நீர் இறைக்கும் இயந்திரங்களும், பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்கு 123 தெளிகருவிகளும், 10 நீர் இறைக்கும் இயந்திரங்களும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்கு 80 தெளிகருவிகளும், 03 நீர் இறைக்கும் இயந்திரங்களும், பளைப் பிரதேச செயலர் பிரிவிற்கு 36தெளிகருவிகளும், 03 நீர் இறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் வைத்து கரைச்சி, பூநகரி, கண்டாவளை, பளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வறுமையிலும், வறுமைக் கோட்டிற்குட்பட்ட பெண்களுக்கான 20 தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

மேற்படி தையல் இயந்திரங்கள் சமூக நலன்புரி அமைச்சினால் கிளி அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## பொதுக்கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி அக்கராயன் ம.வி. பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டம் நாளை பிற்பகல் 4 மணிக்கு வித்தியாலய பொது மண்டபத்தில் அதிபர் ஐ.குகானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது. மேற்படி பாடசாலையின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (பா)


## அறிவமுது பொத்தகசாலை

## பணிநிலை வெற்றிடம்

**பணிநிலை - I : கணக்காளர்**

**தகைமை : க.பொ.த. (உ/த) (அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)**

**பணிநிலை - II : முகாமையாளர், உதவியாளர்**

**தகைமை : க.பொ.த. (சா/த)**

**சம்பளம்** : நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட பணி நிலைகளுக்கு தகைமை உடையவர்கள் சொந்தக் கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து வன்னிப் பெருநிலப்பரப்பில் இயங்கும் **அறிவமுது பொத்தகசாலை** களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்பம் முடிவுத்திகதி : 2003.06.30

ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு: உணவு, தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.

(சி-8163)

# மீண்டும் ஒன்றுபட்ட ரஷ்யாவை உருவாக்க புட்டின் அறைகூவல்

## - பிரிந்துசென்ற குடியரசுத் தலைவர்களிடம் புட்டின் விடுத்தார்.

(மொஸ்கோ)

**ஒன்றுபட்ட ரஷ்யாவை மீண்டும் உருவாக்குவோம் என ரஷ்ய அதிபர் புட்டின் முன்னாள் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து சென்ற நாடுகளின் தலைவர்களிடம் அறைகூவல் விடுத்துள்ளார்.**

வல்லரசாக இருந்த சோவியத் யூனியன் கம்யூனிஸ் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு பல நாடுகளாக சிதறிய பின்னர் முதல் முறையாக அந்நாட்டுத் தலைவர்கள் ஒன்று கூடி ரஷ்யா சுதந்திர தினத்தன்று தலைநகர் மொஸ்கோவில நேற்றுமுன்தினம் கொண்டாடியுள்ளனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே புட்டின் இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார்.


இந்த நிகழ்சியைக் குறிக்கும் வகையில் ரஷ்ய விமானங்கள் விண்ணில் சீறிப்பாய்ந்து சாகசங்கள் நிகழ்த்தின.

ரஷ்ய சனாதிபதி புட்டின் இந்த விழாவில் கலந்துகொண்ட முன்னாள் சனாதிபதி உட்பட பல தலைவர்களையும் வரவேற்றுள்ளனர்.



இந்நிகழ்வில் ரஷ்யப் பெண்களின் அணிவகுப்பு, நடனம் எனப் பல நிகழ்வுகள் நடைபெற்றது.

கோலாகலமான இந்நிகழ்வை குறிப்பிட்ட பார்வையாளர்கள் மட்டுமே கண்டுகளித்துள்ளனர்.



ரஷ்யாவின் சுதந்திர தினத்தன்று விமானங்கள் சாகசம்

# ஆன்சான் சூகியை விடுவிக்க அமெரிக்கா கோரிக்கை

(ரங்கூன்)

மியன்மாரில் நோபல் பரிசு பெற்ற ஜனநாயக நடவடிக்கையாளர் ஆன்சான் சூகியை உடனடியாக விடுதலை செய்யுமாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் நேற்று முன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவர் இராணுவ ஆட்சியாளர்களினால் தடுத்துவைக்கப்பட்டு நேற்றுடன் 13 நாட்கள் நிறைவடைகின்றன. பவல் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் தென் கிழக்காசிய நாடுகளின் பிராந்திய மாநாடு அடுத்தவாரம் நடைபெறும் போது ஆசிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் ஒன்றைதான் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவ்வேளை சூகி விவகாரம் தொடர்பாக ஆசிய நாடுகளின் ஆதரவு பெற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# ஐரோப்பாவிற்கெதிராக கவானாவில் கஸ்ரோ கலந்து கொண்ட பேரணி

(கவானா)

கியூபா மீது தூதரக ரீதியில் தடைகளைக் கொண்டு வந்துள்ள ஐரோப்பிய நாடுகளைக் கண்டித்து தலைநகர் கவானாவில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றுள்ளது.

அமெரிக்காவையொட்டிய கரிபியன் கடற்பகுதியில் அமைந்துள்ளது. கியூபா இது கம்யூனிச நாடாகத் திகழ்வதால் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பைக் கொண்ட அமெரிக்கா இந்நாட்டின் மீது கடந்த பல வருடங்களாகவே பொருளாதாரத் தடையை அமுல்படுத்தி வருகின்றது.

இந்நிலையில் அண்மையில் கியூபா அரசுக்கெதிராக செயற்பட்ட சிலர் கைது செய்யப்பட்டனர்.

இதனைக் கண்டிக்கும் வகையிலும், அமெரிக்காவின் நிர்ப்பந்தத்திற்குப் பணிந்தும் ஸ்பெயின், இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பும் தற்போது கியூபா மீது தூதரக ரீதியிலான தடைகளைக கொண்டுவந்துள்ளதைக் கண்டித்தும் தலைநகர் கவானாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு கண்டன பேரணி நடத்தியுள்ளார்கள்.

இதில் கியூபா சனாதிபதி காஸ்ரோ உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டுள்ளார்கள்.

தங்கள் நாட்டின் மீதான தடைகளை விலக்கிக் கொள்ளாதுவிட்டால் தாங்களும் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என கியூபா தலைவர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

# காங்கிரஸ் ஆட்சியின் குற்றப்பத்திரிகை வெளியிடப்படும்

## - பா.ஜ.கட்சி அறிவிப்பு

(புதுடில்லி)

இந்த ஆண்டின் இறுதியில் நடைபெறவுள்ள மத்திய பிரதேசம் ராஜஸ்தான், சதீஸ்கார், டில்லி ஆகிய 04 மாநில சட்டசபைத் தேர்தலில் ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனி தேர்தல் அறிக்கைகளை வெளியிட பா.ஜ.கட்சி முடிவு செய்துள்ளது.

அந்த மாநிலங்களில் நடைபெற்றுவரும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி மீதான குற்றப்பத்திரிகையும் தமது கட்சி வெளியிடும் என பா.ஜ. கட்சியின் செய்தித தொடர்பாளர் முப்தா நவாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற பா.ஜ.கட்சி தேசிய தேர்தல் பிரசார குழுக் கூட்டத்தையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், பா.ஜ.கட்சி தனது அடிப்படை கொள்கைகளை தேர்தல் பிரச்சினையாக மாற்றாது என்று கூறியுள்ளார்.



மேற்கு பாவாவில் மலைப்பகுதியில் பத்திரிகை நிருபர் ஒருவர் பாம்பின் இரத்தத்தை குடிக்கின்றார்.

# ஜிகாத் பயங்கரவாதத்தை முறியடிக்க அமெ., இந்தியா கூட்டாக முயற்சிக்கும்

## இந்தியத் துணைப்பிரதமர் அத்வானி தெரிவிப்பு

சர்வதேச பயங்கரவாதத்தின் மையமாகப் பாகிஸ்தான் விளங்குகின்றது என துணைப் பிரதமர் அத்வானி குற்றம்சாடியுள்ளார்.

அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல் நகரில் நடைபெற்ற உலக விவகாரங்களுக்கான குழுக்கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜிகாத் என்ற பெயரில் நடைபெற்று வரும் பயங்கரவாதம் இந்தியாவினதும், அமெரிக்காவினதும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பயங்கரவாதத்தினை முறியடிக்க இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் கூறியுள்ளார்.

மதத்தீவிரவாதம் என்ற பெயரில் பயங்கரவாதத்திற்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாகக் கூறிய அவர் உலகம் முழுவதும் சமாதானத்தை நிலவச் செய்வதில் இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து முயற்சிகளை மேற்கொள்ளும் என கூறியுள்ளார்.

அத்துடன் இந்தியாவுடனான கருத்து முரண்பாட்டை கைவிட்டு பயங்கரவாதத்திற்கு எதிராக குரல்கொடுக்க பாகிஸ்தான் முன்வரவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

# ஈராக்கில் - குர்திஸ் கட்சிகள் இணைந்து செயற்பட முடிவு

(பாக்தாத்)

ஈராக்கின் வட பகுதியிலுள்ள குர்திஸ் கட்சிகள் அரசியல் நடவடிக்கைகளில்இணைந்து செயற்பட தீர்மானித்துள்ளனர்.

குர்திஸ்தான் சனநாயகக் கட்சி, குர்திஸ்தான் தேசவிமான யூனியன் என்பன இவ்வாறு இணைந்து கொள்ளவுள்ள கட்சிகளாகும்.

ஈராக்கின் வடபகுதி நகரத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது இரு கட்சிகளின் தலைவர்களும் சேர்ந்து இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர். வடபகுதி மலைப்பிரதேசம் இவர்களது கட்டுப்பாட்டில் உள்ளது.

துருக்கிய அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில் குர்திஸ் கட்சிகள் ஒன்றிணைவதன் மூலம் எதிர்காலத்தில் தனி இராச்சியம் கேட்கப்படலாம் என அச்சம் வெளியிட்டுள்ளார்.




ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச்சபை ராஜதந்திரிகளை வரவேற்சு திரண்டிருக்கும் மக்களிடையே "யுத்தம் வேண்டாம்" என்ற சுலோகத்துடன் காணப்படும் கொங்கோலியச் சிறுவர்.





காசாமுனையில் இஸ்ரேலியப் படையின் உலங்கு வானூர்தி நடத்திய தாக்குதலும் அதனைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தும் பலஸ்தீன ஹமாஸ் ஆதரவாளர்களும்.



(01) 2003ஆம் ஆண்டிற்காக தெரிவு செய்யப்பட்ட உலக அழகி யார்?
♦ அமெலியா வேகா (டொமினிக்கன் குடியரசு)

(02) கடந்த 6ஆம் திகதி பொம்மைகள் வடிவில் மின் விசிறியை அறிமுகப்படுத்தியுள்ள நாடு எது?
♦ ஜப்பான்

(03) மலர்களில் நிறம் மாறும் மலர்கள் என்று எவற்றைக் கூறப்படுகின்றது?
♦ எச்-மியூட்டாபிலிஸ் மலர்கள்

(04) உலகின் முதல் நவீன பல்கலைக்கழகம் எங்கே எப்போது தொடங்கப்பட்டது?
♦ இத்தாலியில் போலங்கா நகரில் 1088ஆம் ஆண்டு

(05) எப்போது மனிதர்கள் செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்வார்கள் என ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் எதிர்பார்க்கின்றது?
♦ 2025ஆம் ஆண்டில்

(06) கோள்களில் எதிர்ப்பக்கமாகச் சுற்றும் கோள் எது?
♦ யுரேனஸ்

(07) உலகின் மிக நீளமான நைல்நதி எந்த நாட்டின் கடலுடன் கலக்கின்றது?
♦ எகிப்தின் கெய்ரோ நகரின் கடலுடன்

(08) 2004ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டி எங்கே நடைபெற உள்ளது?
♦ கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில்

(09) மனித கண்ணில் எத்தனை தசைகள் இணைந்துள்ளன?
♦ ஆறு கட்தசைகள்.

(10) உலகிலேயே மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள விமானத்தளம் எது?
♦ திபெத்திலுள்ள வாசா விமானத்தளம்

(11) இந்தியாவின் மிகப் பெரிய நன்னீர் ஏரி எது?
♦ கொல்லேறு ஏரி (ஆந்திராவிலுள்ளது)

(12) மனித உடலில் ஓடும் இரத்தத்தில் இருக்கும் சிவப்பு அணுக்களின் வாழ்நாட்கள் எவ்வளவு?
♦ 120 நாட்கள்

(13) எவறெஸ்ட் சிகரத்தையடைந்த முதற் பெண்மணி யார்?
♦ ஜங்கோடாபி (ஜப்பான் 1975இல்)

(14) உலகில் அதிகம் எந்த நாட்டில் பூகம்பம் ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள்?
♦ மெக்ஸிகோ

(15) கணினி நகரம் என வர்ணிக்கப்படும் நகரம் எது?
♦ சான்பிரான்சிஸ்கோ

(16) மிகப் பெரிய இறகுகளுடைய பறவை எது?
♦ அல்பெட்ராஸ்

(17) இந்தியாவில் அதிகளவு எண்ணெய் வளம் கொண்ட மாநிலம் எது?
♦ அஸாம்

(18) இலங்கையில் பல்கலைக்கழகம் எப்போது ஆரம்பமானது?
♦ 1921இல்

(19) பெண்களின் கருப்பையின் நிறை எவ்வளவு?
♦ சுமார் 60 கிராம்

(20) சீனாவின் க்வாங்ஜாவ் பகுதி மக்களின் விருப்பமான உணவுகள் எவை?
♦ பன்றிமூளை, கிளிமூளை, பாம்பு குட்டி, மயில் நாக்கு, யானைப்பாதம், காடிக்கால்

(21) முதன் முதலாக நாய் வடிவில் றோபோவை உருவாக்கியுள்ள நாடு எது?
♦ ஜப்பான் (சோனி நிறுவனம்)

(22) மனிதர்களின் நண்பன் என அழைக்கப்படும் கடல் வாழ் உயிரினம் எது?
♦ டொல்பின்

# டைப்ரைட்டரின் வரலாறு

டைப்ரைட்டர் என்பது அச்சு எழுத்துகளைப் பதிக்கும் ஓர் இயந்திரமாகும்.மெக்கானிக்கல் டைபோகிராபர் என்று அழைக்கப்படும். டைப்ரைட்டரில் நியூயோர்க் நகரத்துப் பெண்கள் முதன் முதலில் 1837 ஆம் ஆண்டு பயிற்சி பெறத் தொடங்கினார்கள். அக்காலத்திலே இவ்வாறான பயிற்சிக்காக வேண்டி சாதாரணப் பெண்களை சேர்த்துக் கொள்ளவில்லை. காரணம் சாதாரணப் பெண்களால் டைப்ரைட்டரின் Key களை அழுத்தி அடிக்க முடியாதென நினைத்து உடலுறுதி கொண்டவர்களையே அதற்காக வேண்டி மிக அவதானத்துடன் தேர்ந்தெடுத்து வந்தனர்.

ஆரம்பத்தில் நிமிடத்திற்கு 15 முதல் 20 வார்த்தைகளை மட்டும் Tipe செய்ய முடிந்த பயிற்சியானது அடுத்தடுத்த நூற்றாண்டுக்கும் மத்தியில் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கத் தொடங்கியது. அப்போது வியாபார அலுவலகங்களில் வேலை செய்தோர் நிமிடத்திற்கு 30 முதல் 100 வார்த்தைகள் வரை அடிக்கத் தொடங்கினார்கள்.

தட்டச்சு இயந்திரமானது 1714 ஆம் ஆண்டில் "ஹென்றிமில்" என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. சகல அலுவலகத் தட்டச்சு இயந்திரங்களும் இன்று அவரின் பெயரைத் தவறாமல் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

1874 ஆம் ஆணடு முதல் புதிய வகை அறிமுகமானது. இது முதல் 7 வருடங்களில் 1200 இயந்திரங்கள் தான் விற்பனையாகின.

பரிச முறை தோன்றியது. இம் முறையாலே வேகம் அதிகரித்தது.

அடுத்த கட்டமாக மின்சாரத்தில் இயங்கும் தட்டச்சு இயந்திரம் 1925 ஆம் ஆண்டு வந்தது.

அவ்வாறே தமிழ் தட்டச்சு இயந்திரமும் 1936 இல் முதன் முதலில் "முத்தையன்" என்பவரால் வடிவமைக்கப்பட்டு ஒரு சீரான நிலையைப் பெற்றது. அதன் விசைப்பலகை 1956 இல் தான் ஒரு நிலைப் படுத்தப்பட்டது.

# பாதரச ஆவி விளக்கு (Tube Light) எவ்வாறு ஒளிர்கின்றது....

குழலின் உட்புறச் சுவரில் சீரான கலவை பூசப்பட்டிருக்கின்றது. (கல்சியம் டங்ஸ்டேட் ஜிங்க் சல்'பைட், சிலிகேட் போன்றவை) குழலுக்குள் காற்றழுத்தம் நீக்கப்பட்டு பாதரச ஆவி இருக்கும். சூடு படுத்தி எலக்ட்ரான்களை வெளியேற்ற சூட்டுக்கம்பி (filament) இருக்கும்.

எலக்ரான்கள் பாதரச ஆவியின் மேல் மோத பாதரச அணுக்களிலிருந்து ஒருவிதமான ஒளி எழுகின்றது.

இது அல்ட்ராவயலட் ஒளி நமது கண்ணுக்குத் தெரியாதது. இந்த அல்ட்ராவைத் தெரியும்படி மாற்றிக் கொடுக்கவே பூச்சு பூசப்பட்டிருக்கின்றது. அதன் மேல் படும் ஒளியினால் பூசலின் இரசாயன பொருளும் ஒளிர்கின்றது.

எனவே மெர்க்குரி விளக்கில் கிடைப்பது சாதாரண மின்குமிழ் போல நேர்முகமான ஒளி இல்லை. அல்ட்ரா வயலெட்டை மாற்றிய ஒளியாகும்.

முதன் முதலில் பாதரச ஆவி பற்றிக்கொள்ள அதிகப்படியான வோல்டேச் தேவை. இதற்குத்தான் ஸ்டார்ட்டர், சோக் எல்லாம் இருக்கின்றது.

ஸ்டார்ட்டரில் உள்ள ஒரு பகுதி சூடாகி (பை-மெட்டாலிக் ஸ்ட்ரிப் எனப்படுகின்றது.) விரிந்து சோக் மூலம் செல்லும் மின்சாரத்தை நிறுத்த, சோக் அதை எதிர்க்க வோல்ட்டேஸ் அதிகமாகிப் பற்றிக்கொள்கின்றது. பாதரசத்துக்குப் பதிலாக சோடியம் உபயோகித்தால் பவர் அதிகம்.

# அதிகநாள் வாழும் மனிதனின் உடலில் மூன்று அம்சங்கள்

மனிதர்கள் அதிக நாள் வாழும் இரகசியம் என்ன? என்பது பற்றி அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த உலகில் பிறந்த மனிதன் எத்தனை நாள் உயிர் வாழ்வான் என்பது யாருக்கும் தெரியாது. ஒரு சில குழந்தைகள் பிறந்த உடனேயே இறந்துவிடுகிறன. ஒரு சிலர் 100 ஆண்டுக்கு மேல் வாழ்ந்து உலக சாதனை படைக்கிறார்கள். மனிதன் அதிக நாள் வாழும் இரகசியம் என்ன? என்பது பற்றி அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்தனர். 1958-ம் ஆண்டில் இருந்து 1,500 நபரிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதிக நாள் வாழும் மனித உடலில் 3 அம்சங்கள் உதவி செய்வது தெரியவந்தது. ஒன்று உடலின் வெப்பநிலை, அடுத்து குறைவான அளவு இன்சுலின், இன்னொன்று அதிக அளவு டையாஸ் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

## மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை!

மூட்டு வலியால் அவதிப்படும் நோயாளிகளுக்குப் புதிய சாதனம் ஆயுள் வரை பலன் தரும் என்று சவுத் தொம்சன் பல்கலைக்கழக குழு நம்பிக்கை தெரிவித்திருக்கிறது. மூட்டுமாற்று அறுவைச் சிகிச்சை ஆண்டுக்கு சுமார் 35,000 பேருக்கு இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. 60 வயதுக்குக் குறைவானவர்கள் மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை செய்தால் 15 ஆண்டுக்குப் பின்னர் மற்றொரு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியதாகிறது. அந்தக் குறையைப் போக்க புதிய சாதனத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அந்த சாதனத்தை மூட்டில் பொருத்திவிட்டால் ஆயுள் வரை பலன் தரும் என்று அக்குழு நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

## இறந்த உடல் பழுதாகாமல் இருப்பது எப்படி

மருத்துவக் கல்லூரியில் இறந்தவர்களின் உடலை நீண்டகாலம் எவ்வாறு வைத்திருக்கப்படுகின்றது என்றால்,

முழு உடலையுமே பாடம் பண்ணி வைப்பதில்லை. தேவையான பகுதிகளை மட்டும் தான் பாடம் பண்ணி வைத்துக் கொள்ளப்படுகின்றது.

உடல் கெட்டுப் போவது பக்றீரியாவின் தாக்குதலினால் தான். அதனால புழு, பூச்சி, பக்றீரியா இவை எதுவும் அணுகாமல் வைத்துக் கொண்டால் உடல் கெடாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இதற்கு ஃபார்மலின் போன்ற திரவங்களில் மிதக்கவைக்கப்படுகின்றது.

இந்த இரகசியம் எகிப்தியர்களுக்கு(உடலைக் கெடாமல் வைத்திருக்கும்) தெரிந்திருக்கின்றது. இரண்டாயிரம் வருடம் கழித்தும் அவர்கள் மம்மியாக்கிய உடலை இன்னும் மியூசியங்களில் வைத்திருக்கிறார்கள்.

## பறவைகள் பல விதம்

"ஈஸ்டர்ன் கோல்டன் பிளவர்" என்ற பறவை மேற்கு அலாஸ்கா மற்றும் வடகிழக்கு சைபீரியாப் பகுதிகளில் வாழ்கிறது. இது நிற்காமல் ஒரே மூச்சில இரண்டு ஆயிரம் மைல்கள் பறக்கும். "பசுபிக் கோல்டன் பிளவர்" என்ற பறவை சாதாரணமாக குளிர் காலத்தில் இரண்டு ஆயிரம் மைல் கடலைக் கடந்து நிற்காமல் பறக்கும் 'உட்காக்' என்ற பறவை இந்தியாவில் இமாலயப் பகுதிகளில் வாழ்கிறது. இதுவும் ஒரே மூச்சில் ஆயிரத்து ஐநூறு மைல்கள் பறக்கும். இந்தப் பறவைகள் 28 ஆயிரம் அடி உயரத்தில் எவ்வித சிரமமுமின்றிப் பறக்கும்.

* வாத்து ஒரு மணித்தியாலத்தில் 40ல் இருந்து 50 மைல் தூரம் பறக்கும்.

* குருவி ஒரு மணித்தியாலத்தில் 68 மைல்கள் பறக்கும்.

* ஆபிரிக்கக் காடுகளில் வாழக் கூடிய கழுகுகள் சுமார் 15 ஆயிரம் அடி உயரத்திலிருந்து 125 விநாடிகளில் பூமிக்கு வரும்.

* இரவில் அதிக தூரம் பறக்கும் பறவை ஆந்தையாகும்.

* ஆகாயத்தில் நிற்கும் ஒரே பறவை பருந்து ஆகும்.

* பறவை இனத்தை விட்டுத் தனித்து வாழும் பறவை வௌவால் ஆகும்.

* பறவை இனங்களில் தீக்கோழி (Big bird) மட்டுமே தரையில் அதிக வேகமாக ஓடக்கூடியது. (ஆபிரிக்கக் காடுகளில் உள்ளது) மணிக்கு 30-45 மைல்கள். மயிலுக்கு வெகுதூரம் பறக்கவும் முடியாது உயரத்தில் செல்லவும் முடியாது.

* கூடு கட்டத் தெரியாத ஒரே பறவை குயில்.

* இறந்த சகாவுக்காகக் கூட்டமாகக் கூடிச் சோகத்தைத் தெரிவிக்கும் பறவை காகம் மாத்திரமே

## திருடனைத் தப்பவிடாமல் பூட்டிக்கொள்ளும் கார்

திருடனைத் தப்பவிடாமல் பூட்டிக்கொள்ளும் நவீன பூட்டு கார் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. இது தெரியாமல் ஒரு திருடன் அந்த காரைத் திருடிச்செல்ல கதவைத்திறந்தான். உடனே பீப் என்ற ஒலி ஒலித்தது. காரின் கதவு தானாக பூட்டிக் கொண்டது. திருடன் கதவை திறக்க முயற்சி செய்தும் பலனில்லை. உள்ளேயே சிக்கித்தவித்தான். கார் உரிமையாளர் வந்து பார்த்தபோது உள்ளே திருடன் இருப்பது தெரியவந்தது. உடனே பொலிசுக்கு தகவல் கொடுத்தார். பொலிசார் வந்து திருடனைக் கைது செய்தனர். அவன் பையில் 50 டொலர் இருந்தது. காரை திருட முயற்சி செய்ததாகவும், காரில் இருந்த பணத்தை கொள்ளை அடித்ததாகவும் அவன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த சம்பவம் அமெரிக்காவில் புளோரிடா மாகாணத்தில் நடந்தது.

## துருவங்களில் நிலவும் குளிர்ச்சிக்கும், மலைகளின் உச்சியில் நிலவும் குளிர்ச்சிக்கும் காரணம் என்ன?

துருவப் பகுதிகளில் நிலவும் குளிர்ச்சிக்குக் காரணம் சூரிய ஒளியின் பற்றாக்குறையாகும். அதே போல் சூரிய ஒளியின் சாய்வு, மலைகளின் உச்சியில் நிலவும் குளிர்ச்சிக்குக் காரணமாகும்.

உயரம் அதிகமாகச் சுற்றியுள்ள காற்றின் அடர்த்தி குறைந்து கொண்டே செல்கின்றது.

அதனால் சமுத்திரத்தில் இருக்கும் அதிக அடர்த்திக் காற்றுப் பெற்றுக் கொள்ளும் அளவுக்கு மலை மேலுள்ள காற்று மண்டலம் வெப்பத்தைப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை அதனால் குளிராக இருக்கின்றது.

# பண்டைய---------------- உலக அதிசயங்களில் ஒன்றான ஆர்டிமிஸ் தேவதைக் கோயில்

பண்டைக்கால பத்து உலக அதிசயங்களில் ஒன்றான ஆர்டிமிஸ் தேவதைக் கோயில் சுமார் 2800 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது கி.மு.800இல் தனது முதல் பிறவியை எடுத்தது. துருக்கி நாட்டில் அப்போதைய கிரீஸ் நாட்டு 'அயாத செலுக்' நகரத்துக்கு 50கி.மீ. தூரத்தில் இருந்த எஃபிஸ்சஸ் என்ற நகரத்தின் சதுப்பு நிலப் பகுதியில் இந்தக் கோயில் இருந்தது.

ஆர்டிமிஸ் தேவதை யார்? இது இப்படித்தான் இருந்தது என்பதற்கு தகவல்கள் இல்லை. ஆனால் ஆர்டிமிஸ் தேவதை டயானா என்ற இன்னொரு பெயராலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

டயானா என அழைக்கப்படும் இந்த ஆர்டிமிஸ் தேவதை கவர்ச்சியின் அடையாளமாக இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

ஆர்டிமிஸ் தேவதையான டயானா எஃபிஸ்சஸ் நகரத்து வளமை மற்றும் செழுமையின் பிரதி விம்பமாகவும் காணப்பட்டாள்.

ஒரே நேரத்தில் பல உயிர்களுக்கு பாலூட்டிக் காக்க வேண்டிய பொறுப்புக் கொண்ட ஒரு தாயின் நிலையில் எண்ணிலடங்கா மார்பகங்களுடன் ஆர்டிமிஸ் தேவதை இருந்ததாகக் குறிப்புக்கள் கூறுகின்றன.

எனினும் இந்தத் தகவல் கூட உண்மையானதாகவோ, உறுதியானதாகவோ கூறப்படவில்லை. ஏனெனில் இந்தத் தேவதையின் உருவமோ,' ஓவியமோ, சிற்பமோ ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைக்கவில்லை.

தொலைந்து போன பல அதிசயங்களைக் கூட ஓவியங்களாகக் கற்பனையில் வரைந்து விட்டுச் சென்ற அக்கஸ் ஓவியர்களின் கண்களில் ஆர்டிமிஸ் தேவதையின் சிலைகள் சிக்கவில்லையோ தெரியவில்லை.

**உலக அதிசயமாகக் காரணம்:-**

ஆர்டிமிஸ் கோயிலில் சூரிய மண்டலத்தின் கோள்களில் ஒன்றிலிருந்து பூமியில் விழுந்த விண்கல் ஒன்று இருந்ததாகவும், இதை தரிசிப்பதற்கென்றே இந்தக் கோயிலில் கூட்டம் கூடி பின்னாளில் இக்கோயில் பிரபல்யமானதாகவும் இதனால் அன்று இந்தக் கோயில் ஒரு உலக அதிசயமாகக் கருதப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

**கோயிலின் வளர்ச்சி:-**

பூகோள மாற்றங்களினாலும், கால ஓட்டங்களினாலும் இந்த எஃபிஸ்சஸ் நகரம் வளர்ந்து துருக்கி நாட்டின் மிக முக்கியமானதும், கடற்கரையையொட்டி அமைந்ததுமான வியாபார நகரமாகிவிட்டது.

இதனால் வெளிநாடுகளிலிருந்து துருக்கி வந்த வணிகர்களுக்கும், அரசர்களுக்கும் கூட இந்த ஆர்டிமிஸ் தேவதைக் கோயில் ஒரு சுற்றுலாத் தலமாகவும் சிறந்த வழிபாட்டுத் தலமாகவும் மாறியது.

தேவதையைக் காண வந்த வணிகர்கள் முதல் அரச குடிகள் வரை போட்டி போட்டுக் கொண்டு பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்ததில் வரலாற்றில் மட்டுமன்றி அத்திவாரத்திலும் தனக்கென ஒரு ஆழமான அடித்தளத்தைப் போட்டுக்கொண்டது இக்கோயில்.

வரலாற்றுக் குறிப்புக்களின் படி கி.மு. 600இல் உருவான இதன் அடித்தளம் 260 அடிக்கு 430 அடி என்ற அளவில் இருந்தது. இதன் மீது ஏராளமான விண்ணுயரத் தூண்கள் எழுப்பப்பட்டு, இதனிடையே தேவதைக்கு ஒரு இடம் ஒதுக்கியிருந்தார்கள்.

கோயிலில் காணப்படும் வெண்கலத்திலான சிலைகளும், ஏனைய பல சிற்ப வேலைப்பாடுகளும் பிரமாண்டமானவை. கோயிலின் நாயகியான ஆர்டிமிஸ் தேவதையை அலங்கரிக்க தங்கம் முதல் யானைத் தந்தம் வரை வேலைப்பாடுகளில் அமைந்த அணிகலன்களைப் பயன்படுத்தி உள்ளார்கள்.

தேவதையின் காதணி, கைவளையல், கழுத்து மாலை என்பன பெரஷியா நாட்டு நாகரிகத்திலும், வேறு அணிகலன்கள் இந்திய பாரம்பரிய அமைப்பிலும் தயாரிக்கப்பட்டவை.

ஆனால், இத்தனை சிறப்பம்சங்களைக் கொண்டு அமையப் பெற்ற இந்தத் தேவதைக் கோயிலின் பெருமையும் அருமையும் பிற்காலத்தில் வந்த அரசர்களுக்குத் தெரியாமற் போனது.

பல்வேறு காலப்பகுதிகளில் துருக்கி நாட்டை ஆண்ட அரசர்கள் மட்டுமன்றி, இந்த நாட்டின் மீது போர் தொடுத்த அரசர்களும் இந்தத் தேவதைக் கோயிலின் மீது கைவைக்கத் தவறவில்லை.

ஏதோ ஒரு காரணம் கூறப்பட்டு ஒவ்வொரு அரசாட்சியிலும் இக்கோயில் அழிக்கப்பட்டது. எனினும் ஃபீனிக்ஸ் பறவையாய் உயிர்த்தெழுவதற்கு, மாவீரன் அலெக்சாண்டர் கூட ஒரு காரணமாக இருந்திருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

அதேபோல், இந்தக் கோயிலின் மறுபிறப்புகளுக்கு ஆர்டிமிஸ் தேவதையின் சக்தியும் ஒரு காரணம் என்றும் சொல்லப்படுகின்றது.

(இந்தத் தேவதையைப் போல ரோம் நாட்டு வரலாற்றிலும் டயானா என்ற தேவதையை மக்கள் வழிபட்டிருக்கிறார்கள். அந்த டயானா வனவளப் பாதுகாப்பு தேவதையாகவே கருதப்பட்டிருக்கின்றாள்)

ஆர்டிமிஸ் தேவதையின் உருவம் சரியாகத் தெரியாத போதும் இந்தத் தேவதையின் வழிபாடும், சக்தியும் அன்றைய மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் மறுக்கமுடியாதவை.

---

## கப்பல்களில் மஞ்சள் கொடி பறக்கவிடுவதேன்

கப்பல் ஒன்றில் வெள்ளைக்கொடி பறந்துசென்றால் அது சமாதானப் பயணத்தினைக் குறிக்கும். அதேபோல் சிலவேளை மஞ்சள் கொடியினை சில கப்பல்களில் பறக்கவிடுவார்கள். இதன் பொருள் அக்கப்பலில் கொடுமையான தொற்றுநோய் உள்ளவர்கள் பயணம் செய்கிறார்கள் என்பதாகும். இதனைக் கண்டவுடன் கடல் கொள்ளையர்கள் கூட அக்கப்பலைத் தொந்தரவு செய்யாமல் விட்டுவிடுவார்களாம்.

## கடலுக்கடியில்

ஆயிரக்கணக்கான வருடங்களாகவே கடலுக்கு அடியில் போய்ப் பார்க்க வேண்டும் என்று மனிதனுக்கு ஆசை இருந்து வந்திருக்கின்றது.

கிரேக்க தத்துவ மேதை அரிஸ்டோட்டில் கடலுக்கு அடியில் இருக்கின்ற விடயங்களைப் பற்றிச் சுவையாகக் கூறியதையடுத்து, இவருடைய சிஷ்யர் அலெக்சாந்தர் (சுமார் 300 கி.மு.வில்) கண்ணாடியில் பலூன் மாதிரி ஒன்றைத் தயாரித்து அதற்குள் உட்கார்ந்து கொண்டு கடலுக் கடியில் கொஞ்சத் தூரம் சென்று பார்த்துவிட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.

கரையிலிருந்து கடலுக்குள் ஒரு மைல் வரை இருப்பது கண்டங்களின் நிஜ எல்லைகள் தான். இதன் சராசரி ஆழம் 600 அடி. இதன் பின்னர் தான் உண்மையான கடல் ஆரம்பமாகின்றது. இந்தக் கண்டங்களின் எல்லைகளில் மட்டும் இருக்கின்ற கடல்நீர் மூன்று சதவிகிதம்தான்.

இதற்குப் பின்னர் சுமார் 13,000 அடிக்கு ஆழமாக இருக்கும். இங்கே இருப்பது Abyss என்று அழைக்கப்படும் மிகப் பெரிய சமவெளிப் பிரதேசம். இதில் அதிகமாக மலைகள், படுகுழிகள், எரிமலைகள் எல்லாம் இருக்கின்றன.

கடலுக்கடியில் போகும்போது சூரிய வெளிச்சம் மங்கலாகிக் கொண்டே போகும். சுமார் 100 அடிவரைதான் லேசான வெளிச்சம் இருக்கும். அதற்கு மேல் இருட்டுமட்டும்தான். 1000 அடியிலிருந்து கும்மிருட்டு. நமது கையே நமக்குத் தெரியாத இருட்டாக இருக்கும்.

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பிக்கார்ட் என்பவர் நீர்மூழ்கிப்படகு ஒன்றைத் தயாரித்து கடல் எவ்வளவு ஆழமாக இருக்கின்றது என்று பார்க்கவிரும்பினார்.

ட்ரையஸ்ட் என்னும் படகில் இருந்து செங்குத்தாகக் கடலினுள் இறங்கினார். (23ஜனவரி 1960)

நாலு மணி நேரம் ஆனது. தரை வரவேயில்லை. ஐந்து மைல்தூரப் பயணம் செய்தாகிவிட்டது. ஆனால் தரை வரவேயில்லை என்று மேலே தகவல் அனுப்பினார்.

அதன் பின்னர் ஐந்துமணி நேரம் கழிந்துத் தரையைத் தொட்டுவிட்டதாக வயர்லெஸ்மூலம் செய்தி அனுப்பினார்.

பசிபிக் கடலுக்கடியில் அவர் இறங்கியது மெரியானாட்ரெஞ்ச் எனும் படுகுழியில். (இதன் ஆழம் மேலே கரையிலிருந்து 35,808 அடி (சுமார் ஆறேமுக்கால் மைல்) பிக்கார்ட் கீழே 20 நிமிடங்கள் இருந்தார். இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதிலேயே கடலில் மிகமிக ஆழமான இடம் இதுதான்.எவெரெஸ்ட்டின் உயரம் கடல் மட்டத்திலிருந்து 29028 அடிகள் தான். சுமார் ஐந்தரை மைல்.

## நித்திரை பற்றி

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் நாளாந்தம் அவன் கொள்ளும் நித்திரையின் அளவைக் கூட்டினால் சுமார் இருபத்திமூன்று வருடங்கள் நித்திரைகொள்கிறான். தூக்கம் உடலும், மூளையும் வளர்வதற்கும், தம்மை புதுப்பித்துக் கொள்வதற்கும் உதவுகிறது. பிறந்த குழந்தை சுமார் 18மணித்தியாலங்கள் நித்திரை கொள்கிறது. மூன்றிலிருந்து ஐந்து வயதுவரை 11மணித்தியாலங்கள் நித்திரை கொள்கிறது. பின்னர் வயது கூடக் கூட மெல்ல மெல்லக் குறைந்து நாளாந்தம் சராசரி எட்டு மணித்தியாலங்கள் நித்திரை கொள்கிறோம்.

இந்த நித்திரையை ரெம் **(REM)**, நொன்ரெம் **(NON REM)** என்று இரண்டுவகையாகப் பிரித்திருக்கிறார்கள். (ரெம் **REM**) என்றால் **(Rapid Eye Movement)**

E.E.G எலெக்ட்ரோ என்ஸெஃபலோ கிராம் என்னும் மூளையின் சிறிய மின் அலைகளை அறிந்து கொள்ளும் கருவிகளை வைத்துக் கொண்டும் தூக்கத்தை பகுதிபகுதியாக ஆராய்ந்துள்ளனர் ஆராய்ச்சியாளர்.

மனிதன் நித்திரை கொள்ளத் தொடங்கியதும் முதலில் அல்ஃபா அலைகள் தெரிகின்றன. நாளிகைக்கு சுமார் பத்து சைக்கிள் அலைகள் தென்படுகின்றன. அதன் பின் கொஞ்சம் மந்தமான மூன்று சைக்கிள் அலைகள் பின்னர் இடையிடையே திடுக்திடுக்கென்று ஆல்ஃபா இதை ஸ்பிண்டில் என்கிறார்கள்.

இதற்குப் பின் **E.E.G.** மறுபடி மாறுகிறது. திடீர் திடீர் என்று வேகமான அலைகள் தெரிகின்றன. அதே சமயம் கண்கள் இடமும் வலமுமாக நகர ஆரம்பிக்கின்றன. இதைத்தான் "ரெம்" என்கிறார்கள். இந்த நிலையில்தான் கனவுகளும் தோன்றுகின்றன. சமீபத்திய கனவாராய்ச்சியில் கனவுகள் தொடர்ந்து நிகழ்கின்றன. ரெம்கனவுகள் கொஞ்சம் பளிச்சென்று ஞாபகமிருக்கின்றன என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். மிருகங்களின் நித்திரை அவற்றின் உயிர் வாழ்தல் காலத்தின் அளவைப் பொறுத்திருக்கிறது. எதிரிகளிடமிருந்து அபாயம் இல்லாத போது தான் நித்திரை கொள்ளும்.

இருப்பினும் மனிதரால் ஒரு அளவுதான் நித்திரையைக்கட்டுப்படுத்தமுடியும். மனிதனுக்குள் இருக்கும் இரண்டு செயற்பாடுகளுக்கிடையில் நித்திரை ஒரு போராட்டமாகியும் வருகிறது. ஒரு பக்கம் அபாயம், சத்தம், இடைஞ்சல் இவற்றால் மூளையின் ஸெரிபரல்கார்ட்டெக்ஸ் பகுதிக்கு எச்சரிக்கை போய் சர்வமும் விழித்துக்கொள்ள ஆணை இன்னொரு பக்கம். நித்திரை என்னும் ஒருவிதமான இரசாயனவிளைவு அதிக நேரம் விழித்திருந்தால் நமக்குள் ஸெரோடோனின் நோராட்ரினலின் என்பன அதிகமாகி கண்களை சுழற்றுகிறது. நாம் விழித்திருப்பது என்பது இந்த இரண்டு செயற்பாடுகளில் எது வெல்கிறது என்பதைப் பொறுத்ததாகும்.

எது எப்படி இருப்பினும் அளவான நித்திரை மனிதன் ஆரோக்கியமாக இருக்க அவசியமானதாகும்.

## மனிதனின் தனித்துவத்திற்கு காரணமான மரபணு கண்டுபிடிப்பு

அமெரிக்க விஞ்ஞானிகள் மனிதனின் தனித்துவத்திற்குக் காரணமான மரபணுவைக் கண்டறிந்துள்ளனர்.

இம்மரபணு புதிய பழைய உலகக் குரங்குகளிலிருந்து மனிதன், சிம்பன்சி, ஓரங்குட்டான், கொரில்லா போன்றவை வேறாகப் பிரிந்த போது தோன்றி இருப்பதுடன் தானாகவே இரட்டிப்படைந்து பல புதிய மனிதனுக்கே சிறப்பான மரபணுக்களை உருவாக்கியது என ஹவாட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இம்மரபணு(**Tre2**) மனிதர்களின் நெருங்கிய விலங்கு உறவினர் தவிர மிகச் சில முலையூட்டிகளிலேயே காணப்படுகின்றது.

லெமோர் போன்ற ஆதியான பிறைமேற்றாக்களில் இது காணப்படாததுடன் உயர் பிறைமேற்றாக்களான கொரில்லா, சிம்பன்சி, ஓரங்குட்டான் போன்றவற்றில் காணப்படுகின்றது.

உயர் பிறை மேற்றாக்களின் கூர்ப்பின் போது இரு மரபணுக்கள் இணைந்து இப்புதிய மரபணு தோன்றியிருக்க வேண்டும்.

விலங்கு இராச்சியத்தின் இறுதிக் காலத்தில் இதன் திடீர்த் தோற்றம் மனித இனத்தின் கூர்ப்பைத் தூண்டியிருக்க வேண்டும் எனக் கொள்கையளவில் கருதப்படுகின்றது.

## விவேகானந்தர் சந்தித்த முட்டாள்கள்

விவேகானந்தர் அதிகமாக பிரபல்யமடையாதிருந்த காலத்தில் ஒரு சமயம் தென்னிந்தியாவில் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். விவேகானந்தருக்கு அருகில் இருந்த சில வெள்ளைக்கார இராணுவத்தினர். சந்நியாசிகளைப் பற்றி நிந்தனையாகப் பேசிக் கொண்டிருந்தனர். விவேகானந்தரோ எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தார். பின்னர் சேலம் ரயில் நிலையத்தில் இரநிலைய அதிகாரிடம் அவர் ஆங்கிலத்தில் உரையாடிக் கொண்டிருப்பதை அவதானித்த அந்த இராணுவத்தினர் அவர் அருகே சென்று " உமக்குத் தான் ஆங்கிலம் தெரியுமே. எங்கள் பேச்சை மறுத்து ஏன் எதுவும் சொல்லவில்லை" என்று கேட்டனர். அதற்கு விவேகானந்தர், "முட்டாள்களை நான் சந்தித்தது இது முதல் தடவையல்ல" என சுவையாகப் பதிலளித்தார்.

# கிளிநொச்சி மாவட்டத்தின் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளினது நோக்கு

இன்று உலகையும் உலக சமூகத்தையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பாரிய பிரச்சினைகளில் மிக முக்கியத்துவம் பெற்றுள்ள விடயம் சுற்றாடல் பிரச்சினையாகும். இதன் தாக்கமானது நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றதேயொழிய குறைந்தபாடாக இல்லை. சுற்றாடல் மாசுறுதலை அறிந்திருந்தும் மனிதன் தனது எண்ணிலடங்கா ஆசைகளினால் இவற்றை கருத்திற் கொள்ளும் மனநிலையில் இல்லை. இருந்தாலும் தற்போது ஏற்பட்டுவரும் சுற்றாடல் பிரச்சினைகள் ஒவ்வொரு மனிதனின் குரல்வளைக்கும் அழுத்தம் கொடுக்கும் கட்டத்தையடைந்துள்ளது. தமது எதிர்கால சந்ததியினரை உயிர்த்துடிப்புள்ளவர்களாக உருவாக்க வேண்டும் என்றால் எமது போராட்டங்களாலும், எழுச்சிகளாலும் மட்டும் முடியாது. அத்துடன் போராடிப் பெறும் சுதந்திரத் திற்கும் அர்த்தமில்லாது போய்விடும் எனவே, எமது எதிர்கால சந்ததியை உயிர்த்துடிப்புடன் உருவாக்க வேண்டுமெனின் போராட்ட எழுச்சிகளுடன் நிலம், நீர், வளி போன்ற பௌதீக இயற்கைக் கொடைகளை மாசடையாது காப்பாற்றி எமது எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைப்பது எமது தலையாய கடமை என்பதை ஒவ்வொரு தனிமனிதனும் கருத்திற் கொண்டால் தான் எமது போராட்டத்திற்கும் எழுச்சிக்கும் அர்த்தமிருக்கும். நாம் இதனை எவ்வாறு கையளிக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்பட்டால்தான் நாம் நல்லதொரு எதிர்கால சமூகத்தை உருவாக்க முடியும் என்பது உறுதியாகிவிடும்.

எமது மாவட்டமானது போரினால், அனர்த்தங்களினால் பெரிதும் பாதிக்கப்படும் இடங்களில் ஒன்றாகும். இவை கூட எமது எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாகும்.

ஜப்பானை எடுத்துக்கொண்டால் 1945 ஆம் ஆண்டு கிரோஷிமா, நாகசாகி போன்ற இடங்களில் அமெரிக்காவினால் போடப்பட்ட அணுக்குண்டின் தாக்கம் இன்றும் அங்குள்ளது என்பதை நாம் எமது எண்ணத்திற் கொள்ள வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டமானது போரினால் பாதிக்கப்பட்டு, மக்கள் தமது இருப்பிடங்களை இழந்து, இடம் பெயர்ந்து தேசம்விட்டுத் தேசம் நகர்ந்து, பல துன்பங்களை அனுபவித்து தற்போது தமது இருப்பிடங்களை அடைந்து கொண்டிருக்கின்ற இந்த வேளையில் இச் சூழல் பாதுகாப்பு அவர்கள் மனதில் ஆழப் பதிக்கப்படல் வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டமானது நான்கு பிரதேச செயலர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி நகரத்தை எடுத்துக்கொண்டால் மக்கள் நெருக்கமாக வாழும் பிரதேசமாகும். முக்கியமாக இதன் கட்டமைப்புக்களில் வீதிகளை எடுத்துக்கொண்டால் வீதிகள் அநேகமாக சேதமாக்கப்பட்டே காணப்படுகின்றது. அத்துடன் சில வீதிகள் கிரவல் போடப்பட்டும் காணப்படுகின்றது. இதனால் வாகனங்கள் செல்லும் போது வீதிகளில் செல்பவர்களை இது பெரிதும் பாதிக்கின்றது. சுவாச, தோல் நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்களை அதிகமாக்குகின்றது. அத்துடன் வீதிகளிற்கு அருகிலுள்ள வசிப்பிடங்களையும் பெரிதாகப் பாதிக்கின்றது. தாவரங்கள் என்பது எமது சொத்து,இத்தூசு துணிக்கைகள் தாவரங்களின் இலைகளின் மேற்பரப்பில் படிந்து அவற்றின் ஒளித்தொகுப்பைப் பாதிப்பதால் அது எமது சூழலையே பாதிப்படையச் செய்கின்றது. வளி அசைவதனாலேயே காற்றும், மழைவீழ்ச்சியும் உருவாகின்றது. இத்தூசு துணிக்கைகள் வளிமண்டலத்தை அடைவதால் வளியை அசையாது வைத்திருக்கின்றது. எனவே, காற்றையும் மழைவீழ்ச்சியையும் இவை பாதிக்கின்றது. இத்தூசு துணிக்கைகள் வளிமண்டலத்தை அடைதலும் எமது எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்லும் எச்சங்களில் ஒன்றாகின்றது. எனவே, நாம் நகரத்திட்டமிடலுக்கு அமைவாக வீதிகளை திருத்தியமைக்காவிட்டால் எம்மை நாமே குழிதோண்டிப் புதைக்க வேண்டிய நிலை ஏற்படும்.

உலகத்திலேயே நீர்த்தட்டுப்பாடு அதிகரித்து வருகின்றது. மனிதன் நன்னீர் வற்றாத வளமெனக்கருதி


திருமதி அமலராசா தமிழ்ச்செல்வி
பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்
கச்சேரி-கிளிநொச்சி


அதனைப் பாதுகாக்கத் தவறுகிறான். வளத்தை சுற்றோட்டத்தை முறையில் தரும் தொகுதிகள் (2ம் நீர்வட்டம்) குழப்பப்படாமல் இருந்தால்தான் அவ்வளம் வற்றாத வளமாக இருக்கும். ஆனால் இத்தொகுதிகள் மனிதனின் முறையற்ற செயற்பாடுகளினால் சூழப்படுகின்றது. உலகத்திலேயே 0.5 % நீரே நன்னீராகும். அதிலும் 0.003 % நீரே குடிப்பதற்கு உகந்ததாகக் கிடைக்கின்றது. மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும்போது எமது பிரதேசத்தில் நீர்கிடைத்தாலும் அந்நீர் எந்தளவிற்கு தூய்மையானது என்பது கேள்விக்குறியாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் கிளிநொச்சிப் பகுதி, திருவையாற்றின் சில பகுதிகள் ஆகிய இடங்களில் நீர் மிக ஆழத்தில் காணப்படுகின்றது. பூநகரியில் அநேகமான இடங்களில் உவர் நீராகவே காணப்படுகின்றது. 1956 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது கடல் நீரும் கிராமங்களுள் உவர்ந்த பின் அங்கு அநேகமாக எல்லா நீர் நிலைகளும் சவராக்கப் பட்டு விட்டன. குடமுருட்டி, கறுக்காய்தீவு, செல்லையாதீவு, சித்தன்கேணி, மண்டைக்கல், ஞானிமடம், ஆலங்கேணி போன்ற இடங்கள் உவராக்கப்பட்டு காணப்படுகின்றது.

கண்டாவளை, பளை ஆகிய பகுதிகளின் சில இடங்களில் உவர் நீராகக் காணப்படுகின்றது. இவற்றிற்கு முக்கிய காரணங்களில் ஒன்று கடலரிப்பாகும். கடல் அரிப்பால் கடல்நீரானது கிராமங்களுள் ஊடுருவுவதனால் இந்நிலை ஏற்படுகின்றது. இத்தோடு மட்டும் இது நின்றுவிடாது கரையோரப் பிரதேசங்கள் மழைக் காலங்களிலும் காலப்போக்கிலும் நீருள் மூழ்கும் நிலை ஏற்படும். இவ்வாறு ஏற்படும்போது எமது தேசத்தை எவ்வாறு பேணமுடியும். எனவே கடல் நீர்கிராமங்களுள் ஊடுருவுவதைத் தடுப்பதற்கான இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உறுதியான எல்லைகளைப்போடுவதன் மூலம் இதைத் தடைசெய்யலாம்.

அடுத்ததாக குழாய்க்கிணறுகளை அமைப்பதும் நன்னீரைக் காலப்போக்கில் உவராக்கும் ஓர் செயற்பாடாகும். குழாய்க்கிணறுகள் அமைக்கும் போது கடல்மட்டத்துடன் கிட்ட அடிக்கப்படுவதால் கடல் நீரும், நன்னீரும் கலப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே, காலப்போக்கில் அந்நீர் உவராக்கப்படும் வாய்ப்புக்கள் அதிகரிப்பது மட்டுமல்லாது அம்மண்ணும் பாவனைக்கு உகந்ததல்லாத உவர்மண்ணாக மாறும் சந்தர்ப்பம் ஏற்படும்.

ஆனையிறவில் வீசும் உப்புக்காற்று கிராமங்களுள் ஊடுருவலாம். அங்குள்ள பெரிய மரங்கள் தடையாக இருந்தன. ஆனால் போர் அனர்த்தங்களினால் இங்குள்ள மரங்கள் அழிக்கப்பட்டதால் தற்போது உப்புக்காற்று கிராமங்களுக்கு வீசப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். எனவே மரங்களை நடுகை செய்யும் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக கண்டகண்ட இடங்களில் மண் அள்ளுவதையும் தடைசெய்வதற்கான கட்டாய சட்டங்களை கொண்டு வருதல் வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருநாளைக்கு 200 லோட் மண் வரை அள்ளப்படுகின்றது. இவ்வாறு அள்ளப்பட்டால் எமது பிரதேசத்தின் நிலை என்ன? பளைப் பிரதேசத்தில் அல்லிப்பளை, முல்லையடி, கிளாலி, தர்மங்கேணி போன்ற இடங்களிலும் ஊற்றுப்புலத்திலும் மண் அத்துமீறி அள்ளப்படுவது தடை செய்து அள்ளக்கூடிய குடமுருட்டி, முறிகண்டி 02ம் கட்டை, கண்டாவளை, பன்னங்கண்டி, நஞ்சுண்ட காடு , கண்ணகிபுரம் போன்ற இடங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அள்ளுவதற்கு அனுமதி வழங்கலாம். மணலை எல்லைமீறி அள்ளியதால் ஊற்றுப்புல பிரதேச மக்கள் மழைகாலங்களில் பெரிதும் இன்னல்களை எதிர்நோக்குகின்றார்கள். அப்பிரதேசங்களில் மண்ணின் வளமும் பாதிப்பிற்குள்ளாகிறது.

புவியில் வாழத்தேவையான நன்னீரை கிடைக்கச் செய்யும் முக்கிய காரணி ஈரத்தைப் பேணும் மண்ணின்ஆற்றலாகும். இது காடுகள், புல் நிலங்கள் போன்ற மூடுகை இருப்பதைப் பொறுத்தேயாகும். காடுகள் நீரை உறிஞ்சிவைத்திருக்கும் திறன் விளைவாகவே வரட்சிக்காலங்களில் கூட ஆறுகள் ஓடுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 44 % காடுகளால் நிரப்பப்பட்டிருந்தது. தற்போது 14 % காடுகளே காணப்படுகின்றது. எமது பிரதேசம் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் காடுகள் எரிக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் காணப்படுகின்றது. ஒரு பிரதேசமானது இயற்கைச் சமநிலையில் இருக்கவேண்டுமானால் குறைந்தது 20 % காடுகளாவது காணப்படல் வேண்டும். எனவே, எமது பிரதேசம் எவ்வளவு பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளது என்பதை இதிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது.எனவே அழிக்கப்பட்டு எரிக்கப்பட்ட காட்டுத் தொகுதிகளில் இருந்த இடங்களில் மீள் வனமாக்கல் முயற்சியில் ஈடுபட வேண்டும் அத்துடன் மீள் குடியேற்றத்திற்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு புதிய காடுகளையும் உருவாக்கிக் கொள்ளமுடியும். அத்துடன் போர் அனர்த்தங்களினால் பளைப்பிரதேசத்தில் மட்டும் 6 00,000 தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. எனவே, இவற்றிற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

காடுகளைப் பொறுத்தவரை கண்டற் காடுகளும் முக்கியத்துவம் வாய்ந்தன. எனவே, அநேகமாகக் கடலை அண்டிய பிரதேசங்களில் சதுப்பு நிலங்களில் காணப்படுகின்றன. இவை மண்ணை இறுக்கமாக வைத்திருப்பதற்கு மிகமுக்கியமானவை. அத்துடன் மண்ணை வளமாக்கும் தன்மையும் கொண்டன. எனவே, இவற்றை அழியவிடாது பேண வேண்டும். இவற்றை விறகிற்காக அழிப்பதையும் தடைசெய்ய வேண்டும். மீள் நடுகையும் மேற்கொள்ளலாம்.

அதுமட்டுமல்ல போர்க்காலங்களில் செல்கள் கிணற்றுள் விழுவது சாதாரணமான ஒரு செயற்பாடாகக் காணப்பட்டது. இவற்றின் இரசாயனப் பொருட்கள் நீருடன் கலப்பதால் நீர் நஞ்சாக்கப்பட்டு மாசாக்கப்படுவதால் அந்நீர் பாவனைக்கு உகந்ததல்லாததாவது நீர் நெருக்கடிக்கு மற்றுமொரு காரணமாகும். எனவே, இவற்றை அகற்றும் இயக்கங்களுக்கு (வெண்புறா), உடன் அறிவித்து நீரின் தூய்மையைப் பரீட்சித்து பாவனைக்கு உட்படுத்த வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை விவசாயப் பிரதேசங்கள்தான் அதிகம். நெற்பயிர் முக்கிய பயிராகும். இவற்றிற்கான நீர் வன்னேரிக்குளம், இரணைமடு, கரியாலை, நாகபடுவான், முறிப்பு, கல்மடு, போன்ற நீர்த்தேக்கங்களில் மிதமிஞ்சிய பாவனையாலும், கிருமிநாசினிகள் கவனமில்லாத விசிறல்களினாலும் அவை நீருடன் கலப்பதால் நீர் மாசடைகின்றது. அத்துடன் அவை நிலக்கீழ் நீரையும் அடைவது மட்டுமல்லாது வளிமண்டலத்தையும் மாசடையச் செய்கின்றது. எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு உரம், கிருமிநாசினிகளை பயன்படுத்த வேண்டும். அத்துடன் கூடுதலாக இயற்கை உரங்களைப் பாவிப்பதற்கு பழக்கிக்கொண்டால் சூழலில்விடப்படும் கழிவுகளைக் குறைத்துக்கொள்ள முடியும். அத்தோடு செலவும் குறைவாகஏற்படும். உரப்பாவனை , கிருமிநாசினி களின் விசிறல் முறைகள் என்பவற்றைப்பற்றி விவசாயிகளுக்குப் போதிய விளக்கங்களை வழங்க வேண்டும்.

அடுத்ததாக மிதிவெடிகள் உள்ள பிரதேசங்களை வெண்புறா போன்ற நிறுவனங்களின் உதவியுடன் விரைவில் அகற்றி அப்பிரதேசங்களைப் பாவனைக்கு உகந்த பிரதேசங்களாக மாற்றவேண்டும்.

தற்போது எமதுபிரதேசத்தில் ரிசுப்பைகள், பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்றவற்றின் பாவனை கட்டுப்பாடற்ற முறையில் சென்று கொண்டிருக்கின்றது .இவற்றின் பாவனைகளினால் நாம் பாரிய சூழல்பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டிவரும்.இவை உக்கும் தன்மையற்றவை. புதைக்கும் போது மண் நஞ்சாக்கப்படுகின்றது. எரிக்கும்போது இவை குளோரோ புளோரோ காபன் வாயுக்களை வெளிவிடுவதால் வளிமண்டல ஓசோனைப் பாதிக்கின்றது. வளிமண்டல ஓசோன் சூரியனில் இருந்து வரும் மனிதனுக்கு ஆபத்தை விளைவிக்கும் ஒளிக்கதிர்கள் வளிமண்டலத்தை அடைவதைத் தடை செய்கின்றது. எனவே இவற்றை நாம் தாழ்க்கவோ.அழிக்கவோ கூடாது. அத்துடன் இவற்றைக் கண்டகண்ட இடங்களில்இடுவதால் நகரமே அழகற்றுக் காணப்படுகின்றது என்பது கண்கூடு. எனவே இவற்றைத் தவிர்த்து பேப்பர் போன்ற உக்கக் கூடிய பொருட்களைப் பயன்படுத்தி பைகளைத் தயாரிப்பதால் எமது உணவு உற்பத்தியையும் கூட்டக்கூடியதாக இருக்கும். வெளிநாடுகளில்கழிவுப் பிளாஸ்ரிக் பொருட்கள் மீள் பாவனைக்கு உட்படுத்தப்படுகின்றது. அண்மையில் இந்தியாவில் தாருடன் பிளாஸ்ரிக்கையும் வீதி போடுவதற்குப் பயன்படும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாருடன் பிளாஸ்ரிக்கைச் சேர்த்து வீதி போடுவதால் சாதாரண தாரைவிடக் கூடிய காலத்திற்கு நீடித்திருக்கக் கூடியதாக இருக்கும் எனவும் ஆய்ந்தறிந்துள்ளார்கள். மருத்துவத் துறையில் கூட பிளாஸ்ரிக் முக்கியமானது. எனவே, கழிவு என்பது எம்மில் தான் தங்கியுள்ளது என்பது இதிலிருந்து விளங்குகின்றது.

அடுத்தாக நெல் ஆலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் ஒழுங்கான முறையில் அகற்றப்படாவிட்டால் ஆலைகள் அமைந்துள்ள சூழல் பெரிதும் பாதிக்கப்படும். எனவே, வெளியேற்றப்படும் கழிவு நீரை சுத்திகரித்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே மாசடைதல் என்பது மனிதனாலேயே ஏற்படுகின்றது. நாம் ஒரு வளமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டுமென்றால் எமது பிரதேசம், எனது பிரதேசம் என்ற எண்ணக்கருவை அடிமனதில் நிறுத்தி மக்களிற்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் நகரத் திட்டமிடலுக்கு அமைவாகவும் ஒவ்வொரு வேலைத் திட்டங்களிற்கான இட அமைவுகளும் அமைத்தலும் சூழலை நாம் இலகுவாகப் பேணக் கூடியதாக இருக்கும்.


13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
08-07-1968



ஆண்டவன் மடியில்
14-06-1990

உயர்திரு அமரர் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தராசா

தொழில்நுட்பவியலாளர், நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, கிளிநொச்சி.

(காந்தன் T.A-அம்பாள்வளவு, குமரபுரம்,பரந்தன்)

ஆசை மகனே அன்புமிகு கண்மணியே!
நேசத்துரையே நேர்மைமிகு மாதவமே!
பாசமிகு சோதரனே பலகலைகள் கற்றவனே!
தூயவுளம்படைத்தவனே தொண்டுபல செய்பவனே
நீர் வழங்கல் சபைதனில் நிறை சேவையாற்றுகையில்
கொடிய அரக்கரின் குண்டுக்கிரையானாயோ?
வருடம் பதின்மூன்றானாலும் உன் நினைவை நாம் மறவோம்

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

த.மு:
இல:39/1,
கணேசபுரம்,
கிளிநொச்சி.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, தாய், தந்தை,
சகோதரர்கள்,மைத்துனர், மருமக்கள்.

(3317)

## சிந்தனைக்கு

சமாதானத்தை நான் ஆத்மபூர்வமாக விரும்புகின்றேன். எனது மக்கள் நிம்மதியாக, சமாதானமாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழ வேண்டும் என்பதே எனது ஆன்மிக இலட்சியம்.

தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 14-06-2003

# அர்த்தமுள்ள நிராகரிப்பு

பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகளின் பரந்த பங்களிப்புடன் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான வரைபினை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் எனக் கோரியுள்ள புலிகள், டோக்கியோ உதவி வழங்குவோர் மாநாட்டில் சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த தற்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கான யோசனைகளையும் நிராகரித்துள்ளனர்.

டோக்கியோ மாநாட்டில், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில்– விடுதலைப் புலிகளிடம் இருந்து இவ் அறிவிப்பு வெளிவந்துள்ளது. ஆனால், விடுதலைப் புலிகளின் இந்நிலைப்பாடானது டோக்கியோ மாநாட்டிற்குப் பிற்பட்டதொன்றல்ல. டோக்கியோ மாநாட்டிற்கு முன்னதாகவே விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக வலியுறுத்தியிருந்தனர்.

ஆயினும், விடுதலைப் புலிகளின் இக்கோரிக்கைக்கு அரசாங்கத்திடம் இருந்து ஆக்கபூர்வமானதொரு பதிலும் வரவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்காவில் அரசியல் யாப்பிற்கு உட்பட்டதான – விடுதலைப் புலிகளின் பங்களிப்புக் குறித்துத் தெளிவான வரையறைகள் எதுவுமற்றதொரு அதிகார சபையையே சிபார்சு செய்திருந்தார்.

இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு எழுதியிருந்த இரண்டு கடிதங்களும் விடுதலைப் புலிகளால் திட்டவட்டமாகவே நிராகரிக்கப்பட்டன. அத்தோடு, தாம் அனுப்பிய கடிதத்தில் தமது எதிர்பார்க்கை என்ன? நோக்கம் என்ன? என்பது குறித்து புலிகள் தெளிவாகவே சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஆனால், அரசாங்கம் இது குறித்து ஆக்கபூர்வமான பதில் அளிக்காமை காரணமாக புலிகள் டோக்கியோ மாநாட்டிற்குச் செல்லாது புறக்கணிப்புச் செய்தனர். இருப்பினும், டோக்கியோ மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். ஆனால், உண்மையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதியதொரு வரைபையும் அங்கு முன்வைக்கவில்லை. டோக்கியோ மாநாட்டிற்கு முன்னதாக புலிகளிடம் சமர்ப்பித்த 'உயர் சபை' தொடர்பான வரைபையே புதிய பெயரில் அறிவித்திருந்தார் என்பதே உண்மையாகும்.

ஆயினும், டோக்கியோ மாநாட்டில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்க நிதி உதவிகளை வழங்கிய உதவி வழங்குவோர், பேச்சுவார்த்தைகள் உடன் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் எனவும், புலிகளும் உடன் பேச்சுவார்த்தை மேசைக்கு வருதல் வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றினர்.

இதில், விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளாததொரு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றிற்கு விடுதலைப் புலிகள் கட்டுப்பட வேண்டும் என்ற தேவை இல்லை என்பது ஒருபுறம் இருக்க, விடுதலைப் புலிகள் எத்தகைய கோரிக்கைகளை முன்வைத்து ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளையும், டோக்கியோ மாநாட்டையும் புறக்கணித்தார்களோ அது குறித்த முடிவு எதுவுமின்றி எதன் அடிப்படையில் புலிகள் பேச்சுவார்த்தைக்குத் திரும்புதல் வேண்டும் என எவ்வாறு கோர முடியும்.

சர்வதேச ரீதியில் இராணுவ பலமும், பொருளாதார பலமும் கொண்ட நாடுகள் தமது விருப்பிற்கும், தேவைகளுக்கும் ஏற்ற விதத்தில் உலகை வழி நடத்திச் செல்ல முற்படுவது ஒன்றும் புதியதொன்றல்ல. ஆனால், அதற்காக தமது உரிமைக்காக இரத்தம் சிந்திப் போராட்டம் நடத்திய ஓர் இயக்கம், சகலவற்றையும் விட்டெறிந்துவிட்டு அவர்கள் கூறுவதைக் கேட்டுப் பின்னால் செல்வதென்பது எவ்வாறு சாத்தியமாக முடியும? அது சாத்தியமாகுமானால், அவர்களின் முன்னைய கோரிக்கைகள், நடவடிக்கைகள் என்பனவற்றின் அர்த்தம்தான் என்ன?

அதாவது, டோக்கியோ மாநாட்டை விடுதலைப் புலிகள் பகிஷ்கரித்தபோது இடைக்கால நிர்வாகக் கோரிக்கைகளைத் தெளிவாகவே முன்வைத்தனர். ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இதற்கு பரிசீலிக்கத்தக்க / ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு திட்டம் ஒன்றை முன்வைக்காத நிலையில், டோக்கியோ மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது எனக் கூறிக் கொண்டு பேச்சுவார்த்தைகளை எவ்வாறு ஆரம்பிக்க முடியும். அவ்வாறு ஆரம்பிப்பின், டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ள புலிகள் இயக்கம் முன்வைத்த நிபந்தனை ஒரு சாக்குப போக்கு என இது கொள்ளப்படமாட்டாதா?

விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் – இனப்பிரச்சினைக்கான தீர்விற்காகவும் பல விட்டுக் கொடுப்புக்களையும் நெகிழ்ச்சிகளையும் செய்து வந்துள்ளது. ஆனால், புலிகளின் நெகிழ்வானது, தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைக்கும், அடிப்படை உரிமைப் பிரச்சினைக்குமான தீர்விற்காக மேற்கொள்ளப்படுகின்றவையே ஒழிய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினதோ அன்றி உலகின் வேறு சக்திகளின் தேவைகள், விருப்பு, வெறுப்புக்கள் என்பனவற்றை நிறைவு செய்யவோ அன்றி அவர்களை திருப்திப்படுத்துவதற்காகவோ மேற்கொள்ளப்படுபவையல்ல. ஆகையினால், இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று காணப்பட வேண்டுமானால் அம்முயற்சியில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் காணப்பட வேண்டும். தமிழ் மக்களின் தேவைகளும், உரிமைகளும் குறுகிய காலத்திலும், நீண்ட காலத்திலும் நிறைவேற்றப்படுவதற்கான வழி வகைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

-சிறி. சு. கட்சியின் 14ஆவது சம்மேளன-

# நடவடிக்கைக் குழுவில் மகிந்த ராஜபக்ஷ சேர்த்துக் கொள்ளப்படவில்லை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 14ஆவது சம்மேளனத்துக்காக நியமிக்கப்பட்ட குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் பெயர் இடம்பெறவில்லை.

இது தொடர்பாக அவரிடம் பத்திரிகையாளர் கேட்டபோது பட்டியலில் பெயர் இருந்ததாகவும் பின்னர் எவ்வாறு நீக்கப்பட்டது என்பது தனக்குத் தெரியவில்லை எனவும் கூறியுள்ளார்.

நிகழ்ச்சி நடவடிக்கைகளை இலகுவாக்குதல் பொருட்டு, திட்டக்குழு, கலாச்சாரக் குழு, அரசியலமைப்புக்குழு எனப்பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சந்திரிகா, ரத்னசிறி, ஜயரத்ன, அநுரா, அமுனுகம, மங்களசமரவீர, நிமால் சிறிபால டி சில்வா, சுசில பிரேமஜயந்த மற்றும் பல முக்கிய உறுப்பினர்கள் குழுக்களில் அங்கம் வகிக்கின்றனர்.

மேற்படி 14ஆவது சம்மேளனம் எதிர்வரும் 22ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

# 33 மாகாண சபை உறுப்பினர்களின் நியமனங்கள் ரத்தாகும்?

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு தேர்தல் வேட்பு மனுவில் குறிப்பிடப்படாதவர்களை உறுப்பினர்களாக நியமிக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதை யடுத்து 33 மாகாண சபை உறுப்பினர்களின் நியமனம் ரத்துச் செய்யப்படும் என சொலிசிட்டர் ஜெனரல் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் உயர் நீதிமன்ற நீதிபதியிடம் வினவியபோது இன்னும் சில தினங்களில் நீதிமன்ற உத்தரவு தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்படும் என்று கூறியதாக சில்வா கூறியுள்ளார்.

இதன்படி 13 ஐ.தே.க. அங்கத்தவர்களும், 12 பொ.ஐ.மு. அங்கத்தவர்களும், 7 ஜே.வி.பி. அங்கத்தவர்களும் தமது நியமனத்தை இழக்கவுள்ளனர்.

# பல்கலைக்கழகங்களுக்கு உலக வங்கி ஒதுக்கிய 40 மில்லியன் ரூபா பயன்படுத்தப்படவில்லை

## – சிறிலங்கா சனாதிபதி தகவல்

(கொழும்பு)

கல்வி மற்றும் சுகாதார துறைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி எக்காரணத்தின் அடிப்படையிலும் குறைக்கப்பட்டால் அது நாட்டின் எதிர்காலத்தை கடுமையாக பாதிக்குமென சனாதிபதி கூறியுள்ளார்.

சனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களை சந்தித்து உரையாடிய போது அவர் இதனைக் கூறியுள்ளதாக சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை எவ்விதத்திலும் குறைக்க வேண்டாம் என பிரதமருக்கும், அமைச்சரவைக்கும் தாம் அறிவித்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளுக்கென உலக வங்கி ஒதுக்கியுள்ள சுமார் 40 மில்லியன் ரூபா செலவிடப்படாமை குறித்து தன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையெனவும் கூறியுள்ளார்.

## மேல் முறையீட்டு வழக்கு விசாரணை தாமதம்

# உயர் நீதிமன்ற நீதியரசர்களை சாடுகிறார் பிரதம நீதியரசர்

(கொழும்பு)

நாடு பூராவுள்ள 16 உயர் நீதிமன்றங்களில் 200 வழக்குகளின் தீர்ப்பு அவற்றை விசாரணை செய்த நீதிபதிகளால் சரியாகத் தயாரிக்கப்பட்டு மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப் பிக்காததையடுத்து தீர்ப்பை எதிர்த் துத் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடு மீது விசாரணை நடத்த முடியாதுள்ளதாக பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் ஆய்வுகளின் மூலம் தெரியவருகின்றது.

கொழும்பு, இரத்தினபுரி, பதுளை, அம்பாந்தோட்டை, அனுராதபுரம் போன்ற மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதிகளே அதிகமான வழக்கு விசாரணைகளை மேல் நீதிமன்றில் சமர்ப்பிக்காதுள்ளதாகத் தெரிவிக்கப்படுவதோடு இது தொடர்பாக அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

# பானையும் அகப்பையும் சனாதிபதியிடமே உள்ளன

## -அநுரா பண்டார நாயக்க கூறுகின்றார்

(கொழும்பு)

"பானையும் அகப்பையும் சனாதிபதியிடமே இருக்கிறது. அதனால் அவர் எந்நேரத்திலும் அமைச்சரவையில் மாற்றத்தைக் கொண்டு வரமுடியும்". இவ்வாறு முன்னாள் ஸ்ரீ.ல.சு.க. உறுப்பினர் குணரட்னவின் 3ஆம் ஆண்டு நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றிய அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான அனைத்துச் சக்திகளையும் ஒன்று திரட்டி நாம் தேர்தலுக்கு வருவோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# அதிகாரசபை பொறுப்பேற்பு

(கொழும்பு)

யாழ். பருத்தித்துறை இறங்குதுறையை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் துறைமுக அதிகார சபை பொறுப்பேற்கவுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்த துறைமுக அதிகார சபையின் உயரதிகாரிகள் கொண்ட குழுவொன்று இவ்வாறு தெரிவித்துள்ளது.

இறங்கு துறையில் பணியாற்றி வருகின்ற 42 சமயாசமய ஊழியர்களும் அதிகாரசபையில் உள்வாங்கப்படவுள்ளனர்.




## ஸ்டெல்லா ஆர்டோயிஸ் சாம்பியன் பட்டம்

# ஓப்பன் டென்னிஸ் போட்டிகளில் கால் இறுதிக்கு லைட்டன் சுயித் தகுதி

பிரிட்டனில் நடைபெற்றுவரும் ஸ்டெல்லா ஆர்டோயிஸ் சம்பியன் பட்டத்திற்கான ஓப்பன் டென்னிஸ் போட்டிகளில் காலிறுதியில் விளையாட லைட்டன் சுயித் தகுதி பெற்றுள்ளார்.

பிரிட்டன் தலைநகர் லண்டன் அருகே இன்னும் சில தினங்களில் புகழ் பெற்ற விம்பிள் டன் கிராம் ஸ்லாம் போட்டி தொடங்கவுள்ளது.அதில் பங்கேற்கும் வீரர்கள் பயிற்சி பெறும் வகையில் இப்போட்டி நடைபெற்று வருகின்றது. இப்போட்டியில் நேற்று முன்தினம் காலிறுதிக்கு, அதற்கு முந்தின ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரர்களிலொருவரான அவுஸ்திரேலியாவின் லைட்டன் சுயித், பெல்ஜியம் நாட்டின் டிக்வாசனைச் சந்தித்தார். இதில் 7:6,3:6,6:4 எனும் செட்கணக்கில் சுயித்கடுமையாகப்போராடி வெற்றிபெற்றுள்ளார்.

இதன் மூலம் காலிறுதியில் விளையாடும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அண்மையில் முடிவடைந்த பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் சுயித் படுதோல்வி அடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

## பாதுகாவலரின் கொடுமையால் வீட்டிலிருந்து வெளியேறிய

# மூன்று சிறார்கள் புலிகளால் காப்பாற்றப்பட்டு

# சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைப்பு



(அலுவலக செய்தியாளர்)

பாதுகாவலர்களின் கொடுமையினைத் தாங்க முடியாது வீட்டை விட்டு வெளியேறி உறவினர்களைத் தேடியலைந்த மூன்று இளம் சிறார்கள் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழக சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

மேற்படி சம்பவம் கடந்த 05ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருகையில், தாயார் இறந்த நிலையில் சித்தியாரின் கொடுமையினைத் தாங்க முடியாத கண்டியைச் சேர்ந்த 13 வயதுடைய மோகன்ராஜ் என்ற சிறுவனும், அதே இடத்தைச் சேர்ந்த மகேஸ் மது சங்கர் (வயது-12), பூகபில் (வயது-08) ஆகிய இரு சகோதரர்கள் தந்தையாரை இழந்த நிலையில் சிறிய தந்தையாரின் கொடுமையினைத் தாங்க முடியாது மூவருமாகச் சேர்ந்து தாங்கள் சேகரித்து வைத்த பணத்தினைக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி உறவினர் வீட்டிற்குச் செல்ல எத்தனித்துள்ளனர்.

இதனடிப்படையில் கடந்த 05ஆம் திகதி மேற்படி 3 சிறுவர்களும் கண்டியிலிருந்து பேருந்து மூலமாக வவுனியா வந்தடைந்து அங்கிருந்து ஓமந்தையூடாக யாழ். நோக்கிப் பயணித்துள்ளனர். அவர்கள் முகமாலை விடுதலைப்புலிகளின் சோதனைச்சாவடியினை வந்தடைந்ததும் எங்கு செல்வது என்று தெரியாது திக்கற்ற நிலையில் இருந்த வேளையில் விடுதலைப் புலிகளினால் காப்பாற்றப்பட்டு த.பு.கழகத்தினரிடம் கையளிக்கப்பட்டு தற்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் அரவணைப்பில் அவர்களது சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

மேற்படி சிறுவர்களுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டு மீண்டும் உங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல விரும்புகிறீர்களா? என வினவிய பொழுது தெரிவிக்கையில்,

அங்கு சென்றால் சித்தியோ, சித்தப்பாவோ, மீண்டும் எங்களை மோசமாகக் கொடுமைப்படுத்துவார்கள். நாங்கள் இந்நிறுவனத்தின் பராமரிப்பிலிருந்து எமது படிப்பினை மேற்கொள்ளவுள்ளோம் என்று தெரிவித்துள்ளனர்.

மேற்படி மூன்று சிறுவர்களும் கண்டி றஜாவெல தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயின்று வந்ததுடன் இருவர் 7ஆம் ஆண்டிலும் ஒருவர் 3ஆம் ஆண்டிலும் கல்வி பயின்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### இரு தரப்பிலும்...

மைக்கும். யுத்தநிறுத்த நடைமுறைகளில் மீறப்படுகின்ற விடயங்கள் சம்பந்தமாக கண்காணிப்புக்குழு தலையிட்டு தீர்ப்பு வழங்குகின்ற நடைமுறையினைக் கொண்டு வரவேண்டும் என்பதனை அவர்களுக்கு வலியுறுத்தியுள்ளோம்.

அடுத்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெறுகின்ற கொலைகள், கொள்ளைகள் போன்ற பிரச்சினைகள் குறித்தும் அவர்களிடம் சுட்டிக் காட்டியுள்ளோம். அங்கு சட்ட ஒழுங்கைப் பேணுவதில் உள்ள பலவீனங்களை அவர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அடுத்து கண்காணிப்புக்குழுவின் நடமாட்டங்கள் சம்பந்தமாகவும், ஒழுங்கு முறைகள் சம்பந்தமாகவும் அவர்களுடன் கலந்துரையாடியுள்ளோம்.

முக்கிய விடயமாக கடற் பகுதி நடமாட்டம் சம்பந்தமாக விளக்கியுள்ளோம். எமது கட்டுப்பாட்டிலுள்ள கடற்பகுதிகளில் விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக்களும் விடுதலைப்புலிகளின் பயிற்சி நடவடிக்கைகளும் இடம்பெற்றுக் கொண்டேயிருக்கும். அதனைக் கடற்படையினர் தடுப்பது, பரிசோதிப்பது மற்றும் அச்சுறுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்பவைகளைத் தவிர்க்க வேண்டும் என்பதனை கண்காணிப்புக் குழுவினருக்கு வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

இவ்வாறான நடவடிக்கைகள் ஒரு மோதல் நிலைகளை உருவாக்க ஏதுவாக அமைந்துவிடுமென்ற நிலைப்பாட்டினைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம்.

அடுத்து எதிர்காலத்தில் கண்காணிப்புக் குழுக்களின் செயற்பாடுகளை சுமுகமாகச் செயற்படுத்திச் செல்வது சம்பந்தமாகவும் கண்காணிப்புக் குழுவினர் பரிந்துரைத்துள்ளனர்.

நாங்களும் நடைமுறை ஒழுங்குகள் சம்பந்தமாக எங்களது நிலைப்பாடுகளையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம் என்றார்.

மேற்படி கலந்துரையாடல் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலக மண்டபத்தில் பகல் 11.00 மணி முதல் பி.ப 1.00 மணிவரை நடைபெற்றது.விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், ஜோர்ஜ் ஆகியோரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தரப்பில் அதன் தலைவர் ஜெனரல் டெரிக் ரெலெக்சன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பேச்சாளர் மிக்கைல், கண்காணிப்புக் குழுத் தலைவரின் உதவியாளர் எரிக் வொலன், கிளி. கண்காணிப்புக்குழு அலுவலகத்தைச் சேர்ந்த நீக்லஸ் மற்றும் குழுவின் பேச்சாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மேற்படி குழுவினர் நேற்றுக்காலை 10.10 மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கினர்.

அவர்களை அரசியல்துறை நடுவப்பணியகப் பொறுப்பாளர் தியாகராசா, விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தைச் சேர்ந்த பவானந்தன் ஆகியோர் வரவேற்று சமாதானச் செயலகத்திற்கு அழைத்துச் சென்றனர். (சோ)

### வலயக்கல்வி...

த்தில் 59 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் தொடர்பாக எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் துணுக்காய், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா வடக்கு ஆகிய வலயங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (பா)

# மண்டையன் குழு உறுப்பினரின் கைகள் வெட்டப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் ஈ.பி. ஆர். எல். எவ். வரதர் அணியின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் இரண்டு கைகளும் வெட்டப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான ஆனந்தம் (வயது - 35) எனும் நாகமுத்து நாகேந்திரம் என்ற குறிப்பிட்ட நபரே காயமடைந்தவர் எனவும்,

இவர் கடந்த பல மாதங்களாக கொழும்பில் தங்கியிருந்துவிட்டு அண்மையில் யாழ்ப்பாணம் திரும்பியவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர் முன்னாள் மண்டையன் குழு உறுப்பினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மருதனார் மடத்தில் நலன்புரி நிலையத்திற்கு அருகாமையில் உள்ள வீதியோர பற்றைக்குள் இடது கை வெட்டுக் காயத்துடன் தொங்கிய நிலையிலும் வலதுகை முற்றாகத் துண்டிக்கப்பட்ட நிலையிலும் கிடந்து அவலக்குரல் எழுப்பியபோதும் உதவிக்கு எவரும் செல்லவில்லை என்றும் பொலிசாரே இவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### அரசியல் யாப்பை...

மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பொ.ஐ. முன்னணி தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசியல் அமைப்பு சட்டத்தை திருத்தி அமைப்பது தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை நியமிக்கும்படி பொ.ஐ. முன்னணி அரசைக் கோரியுள்ளது.

### மருத்துவ சேவை...

புதுக்குடியிருப்பு ஞாபகார்த்த மருத்துவமனையில் நடைபெறவிருந்த சத்திரசிகிச்சை கண்சத்திர சிகிச்சை, பெண் ஆரோக்கியம் மகப்பேற்று மருத்துவ சிகிச்சைகள் நடைபெறமாட்டாது என மேற்படி மருத்துவமனையினர் தெரிவித்துள்ளனர். (பா)

### குறிப்பான...

னர் முன்னுரிமை தந்துவரும் வாரத்தில் எடுக்க வேண்டும் என்று விவாதிக்கப்பட்டதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேசவல்ல அதிகாரி ஆக்னஸ்தெரிவித்துள்ளார்.

### சமாதானச் சூழலை...

வரவேண்டும் என்பதில் ஆர்வமும், விருப்பமும் கொண்டுள்ளது. அந்த அடிப்படையில் சமாதானச் சூழ்நிலைகள் முன்னேற்றகரமாகச் செல்லும் பட்சத்திலேயே இந்தப் பெருமளவு உதவிகளை கொடுக்கக் கூடியதாக இருக்கும் அல்லது தொடர்ச்சியாக வழங்கக் கூடியதாக இருக்கும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

பெருமளவு உதவிகளை வழங்கி சமாதான சூழ்நிலையை உறுதியாக்கிக்கொள்ளவேண்டும்என்கின்ற உறுதிப்பாடு இருப்பது ஓரளவு புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

கேள்வி: டோக்கியோ மாநாட்டிற்குப் பின்னர் மக்கள் மத்தியில் நிறையவே ஐயங்கள் தோன்றியுள்ளன. இந்தச் சூழ்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்: இது சம்பந்தமாக ஏற்கனவே நாங்கள் தெளிவுபடுத்திவிட்டோம். டோக்கியோ மாநாட்டிற்குப் பின்னால் இப்படியான நடைமுறைகளைப் பேண வேண்டும் என்பது சம்பந்தமாக எமது தலைமைப்பீடம் விடுத்த உத்தியோபூர்வ அறிக்கையில் தெளிவாக்கியுள்ளது.

வடக்கு-கிழக்கிற்கான நிர்வாக அதிகாரம் உள்ள ஓர் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவது தான் சர்வதேச உதவிகள் எதிர்காலத்தில் இங்கு ஏற்படப்போகும் சமாதான முன்னெடுப்புக்களை சாத்தியப்பாடாகவும் உறுதியாகவும் முன்னெடுத்துச் செல்வதற்கு உதவிக்கரமாக இருக்கும் என்பதை ஏற்கனவே நாங்கள் வலியுறுத்தியுள்ளோம்.

கேள்வி: விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான விடயங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க டோக்கியோ மாநாட்டில் குழப்பமாக வெளிப்படுத்தியுள்ளார். இது குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்: அரச தரப்பில் ஏற்கனவே அவர்கள் பரிந்துரைத்த ஒரு சபை நிர்வாக அதிகாரம் உள்ள வடக்கு-கிழக்கை நிர்வகிக்கக்கூடிய அதிகாரமற்ற ஒரு சபையாக அது எங்களால் கருதப்பட்டது. அப்படியான ஒரு நிலைப்பாட்டையே அவர் வெளிப்படுத்தினாரே தவிர முன்னேற்றகரமாகவும் தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் எதிர்பார்க்கின்றது போன்ற நிர்வாக அதிகாரம் உள்ள ஒரு இடைக்கால நிர்வாக அலகைப் பற்றி அவர் அதில் தெளிவுபடுத்தவில்லை.

கேள்வி: டோக்கியோவில் வழங்கப்படும் நிதி தமிழ்ப் பகுதியில் எந்தளவில் பயன்படுத்தப்படும் என நீங்கள் கருதுகின்றீர்கள்.

பதில்: அதை நான் இப்பொழுது உறுதியாகச் சொல்லமுடியாது. தற்போது தான் அந்தத் தீர்மானங்கள் வெளியில் வந்துள்ளன. அவை எப்படி செலவழிக்கப்படும் எப்படி எமது மக்களுக்கு வந்து சேரும் என்பது சம்பந்தமாக எங்களுக்கு பல ஐயப்பாடு இருக்கின்றது. அதை நான் இப்பொழுது உள்ள சூழ்நிலையில் இதனைத் தெளிவுபடுத்த முடியாது.


## மங்களகரமான புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபானு வருடம் வைகாசித் திங்கள் 31ஆம் நாள் 14-06-2003 சனிக்கிழமை (இன்று) காலை 7.30 மணியளவில் வரும் சுபமுகூர்த்த நல்வேளையில்

இல: 336,338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்



என்னும் மொத்த, சில்லறை வியாபாரஸ்தாபனத்தை மதிப்புக்குரிய கௌரவ மாண்புமிகு இந்து கலாசார அமைச்சர் **திரு.தி.மகேஸ்வரன்** அவர்கள் திறந்து வைக்கவுள்ளார் என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம். அத்தருணம் அனைவரும் சமுகமளித்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சில்லறை வாடிக்கையாளர்களின் நலன் கருதி புதுப்பொலிவுடனும் நவீன வசதிகளுடனும் நல்ல தரமான, நல்ல ரகமான பொருட்களை விரும்பிய அளவுகளில் பொதி செய்யப்பட்ட பக்கட்டுக்களில் மிகக்குறைந்த விலையில் விரைவாகப் பெற்றுக் கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நல்ல பொருட்களுக்கு இது ஒரு நம்பிக்கையான ஸ்தாபனம்

336,338, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 3328.

இங்ஙனம்
உரிமையாளரும், ஊழியர்களும்.

(சி-8164)



## திறப்பு விழா



## சர்வதேச தொலைத் தொடர்பு சேவை

நெடுங்கேணி, விசுவமடு, முழங்காவில், பூநகரி ஆகிய இடங்களில் சர்வதேச தொலைத் தொடர்பு சேவை இன்று நண்பகலில் இருந்து தனது சேவையினை ஆரம்பிக்கின்றது என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்

**நிர்வாகம்,**
ச. தொ.தொ. சேவை.

(சி-8165)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.